# ஆண்டறிக்கை

# 2015

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள்**

**தலுபிட்டிய வீதி, ஹுணுப்பிட்டிய, வத்தளை**

*தொலைபேசி : 011-2948102/03, 011-2941859*

*தொலை நகல் : 011-2930252, 011-2949126*

*மின்னஞ்சல் : ccffinance@yahoo.com*

## தூர நோக்கு

“கமநலத்திற்கு அவசியமான பொருட்களையும் சேவைகளையும்

தாமதமின்றி உற்பத்தி செய்து விநியோகிப்பதில்

இலங்கை கமநலத் துறைக்கு சாதகமான முறையில்

பங்களிப்பைச் செலுத்துவதன் மூலம்

அரசாங்கத் துறையில் உள்ள முன்மாதிரியான நிறுவனமாக செயற்படுதல்.”

## செயற்பணி

இலங்கையில் முன்னணி உர உற்பத்தியாளராகவும்

விநியோகத்தராகவும் திகழ்ந்து

அரசாங்கத்தின் கமநலத்திற்கான தூர நோக்கில்

பெருமைவாய்ந்த உரிமையாளராக

உற்பத்தியைப் பரவலாக்கி,

உயர் தரத்திலான உற்பத்தியை வெளிப்படுத்தி,

நிறுவகத் தரப்பினரின் தேவைப்பாட்டிற்கு ஏற்றவகையில் செயற்பட்டு

சுதந்திர நிறுவகமாக செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல்

## பண்புக் கூறுகள்

கணக்களிப்பொறுப்பு
செயலாற்றல் வெளிப்பாடுகள்
வெளிப்படைத்தன்மை
சுற்றாடல் பாதுகாப்பு
தரம்
உறுதிவாய்ந்த
ஊக்குவிப்புப் பணம்

## *உள்ளடக்கம்*


| | | பக்க இல. |
|---|---|---|
| **1** | **கணக்களிப் பொறுப்பு** | |
| 1.1 | தலைவரின் மீளாய்வு | 01 |
| 1.2 | பணிப்பாளர் சபை | 03 |
| 1.3 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 03 |
| 1.4 | சிரேஷ்ட முகாமைத்துவ குழு | 03 |
| 1.5 | கூட்டமைப்பு ஆளுகை | 03 |
| **2.** | **செயற்பாட்டு வெளிப்பாடுகள்** | |
| 2.1 | சந்தை நிலவரம் | 05 |
| 2.2 | கம்பனி செயலாற்றல் | 06 |
| 2.3 | நிதி வெளிப்பாடுகளும் எய்தல்களும் | 06 |
| 2.4 | கம்பனியின் வரலாறு | 07 |
| 2.5 | 2015.03.31 இல் முடிவுற்ற ஆண்டின் போதான சம்பவங்கள் | 07 |
| **3.** | **முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்** | |
| 3.1 | வியாபார மீளாய்வு | 09 |
| 3.2 | நிறுவகக் கட்டமைப்பு மற்றும் விநியோக வலையமைப்பு | 11 |
| 3.3 | வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் | 12 |
| 3.4 | மனித மூலதன சுட்டிகள் | 14 |
| 3.5 | மனித மூலதன நிதி மீளாய்வு | 14 |
| **4.** | **நிதி அறிக்கையிடல்** | |
| • | பணிப்பாளர் சபையின் மீளாய்வு | 15 |
| • | பணிப்பாளர் பொறுப்புக் கூற்று | 17 |
| • | தலைவரினதும் நிதி முகாமையாளர்களினதும் பொறுப்புக் கூற்று | 18 |
| • | சுதந்திரமான கணக்காய்வாளர் அறிக்கை | 19 |
| • | விபரமான வருமானக் கூற்று | 29 |
| • | நிதி நிலைமைக் கூற்று | 30 |
| • | உரிமை மூலதன மாற்றக் கூற்று | 31 |
| • | காசுப் பாய்ச்சற் கூற்று | 32 |
| • | கணக்கீட்டுக் கொள்கைகள் | 33 |
| • | நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள் | 49 |
| **5.** | **கூட்டமைப்புத் தகவல்கள்** | 67 |

# 1. கணக்களிப் பொறுப்பு

## 1.1 தலைவரின் மீளாய்வு

### எய்தல்கள்

அரசாங்க உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகள் சமூகத்திற்கு 35% இற்கு மானிய நெல் உரங்கள் பகிரப்படுவதில் எமது கம்பனி ஈடுபடுகின்றது. நெல் உரங்கள் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கான உரங்களையும் தேசிய உரச் செயலகத்தின் ஏற்பாட்டில் எமது மத்திய களஞ்சியத் தொகுதியூடாகவும் 18 பிராந்திய களஞ்சியங்களினூடாகவும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2014/15 கணக்காண்டு காலப்பகுதியின் போது கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி சகல மூன்று வகையிலுமான 139,580 மெட்ரிக் தொன உரங்களை (யூரியா, ரீஎஸ்பீ மற்றும் எம்ஓபீ) இறக்குமதி செய்துள்ளதுடன் இதே காலப்பகுதியின் போது 99,896 மெட்ரிக் தொன் உரங்கள் நெற்பயிர்ச் செய்கைக்காகவும் ஏனைய நிலப்பயிர்ச்செய்கைக்காக 42,976 மெட்ரிக் தொன் உரங்களையும் விநியோகித்துள்ளது மீளாய்வுக் காலப்பகுதியின் போது கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் புரள்வு ரூபா 1,582 மில்லியனானதுடன் இது ரூபா 282 மில்லியன் தொகையான வரிக்குப் பின்னரான தேறிய இலாபத்தை உருவாக்கியது. 2015 சனவரி மாதத்தின் பின்னர் கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் முகாமைத்தவத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன் இதன் படி மேலும் வினைத்திறனான முறையில் செயற்படுவதற்காக புதிய தலைவரும் பணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

### திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு

நிதியாண்டின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ரூபா 155 மில்லியன் தொகையான வருமான வரியைச் செலுத்துவதற்கு கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி மதிப்பிட்டுள்ளது.

### கணக்காய்வு அறிக்கை

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அறிக்கை 19 ஆம் பக்கம் முதல் 28 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளது.

### நிதிக்கூற்றுக்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 29 ஆம் பக்கம் முதல் 32 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளன.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் கையாளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 33 ஆம் பக்கம் முதல் 48 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளன.

### எதிர்காலப் பாங்கு

புதிய துறைமுகத்தின் சகல வசதிகளையும் பயன்படுத்தி கொழும்புத் துறைமுகத்தின் நெருக்கடி நிலையைக் குறைத்து தெற்கில் உள்ள விவசாயிகள் சமூகத்திற்கு அண்மித்த சபையில் போக்குவரத்துக் கிரயத்தைக் குறைக்கும் நுட்பத்தில் மாகந்தொட்ட மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கு அண்மையில் அம்பாந்தோட்டையில் உரத்தைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஓர் களஞ்சிய அறையை நிர்மாணிப்பதற்கு கம்பனி திட்டமிட்டுள்ளது.

## நன்றி நவிலல்கள்

கம்பனியின் இலக்குகளை எய்துவதற்கு உதவியதோடு எமது திட்டங்களையும் தந்திரோபாயங்களையும் ஆக்கபூர்வமான முறையில் அமுலாக்குவதற்காகக் கடும் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் பொறுப்புகளையும் நல்கிய வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் சிரேஷ்ட முகாமையாளர்களுக்கும், நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும், எழுதுவினைஞர்களுக்கும் அதனோடிணைந்த உத்தியோகத்தர்களுக்கும் சகல ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் திட்டங்களையும் தந்திரோபாயங்களையும் பயனுறுதியுடன் அமுலாக்குவதற்கு தமது கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, வினைத்திறன் மற்றும் கடப்பாடுகளை வழங்கியமைக்காக இத் தருணத்தில் சபையின் சார்பாக, நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் குறிக்கோள்களை எய்துவதற்கு பணிப்பாளர் சபையால் எனக்களிக்கப்பட்ட ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் நான் பாராட்டுகின்றேன். எந்தவித முறைப்பாடுகளோ அல்லது குறைபாடுகளோ இன்றி விநியோக நிகழச்சித்திட்டத்தின் சுமூகமான நிலைக்காக உரக் கொள்வனவுத் திட்டம் தொடர்பாக குறிப்பாக பணிப்பாளர், தேசிய உரங்கள் செயலகம் மற்றும் அவரது உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட தொடர்ச்சியான உதவிக்காகவும், பக்கபலம் மற்றும் வழிகாட்டலுக்கு குறிப்பாக நான் இச் சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். திறைசேரிச் செயற்பாடுகள் பிரிவின் பணிப்பாளர் நாயகத்திற்கும், அபிவிருத்தி நிதிப் பிரிவின் பணிப்பாளர் நாயகத்திற்கும், அவர்களது பதவியணியினருக்கும் எமது நாணயக் கடித முறிகளை உரிய நேரத்தில் தீர்ப்பதற்கு உதவியளித்தமைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இறக்குமதிகளுக்காக நாணயக் கடிதத்தைத் தயாரிப்பதற்கு கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனிக்கு வசதிகளை வழங்கிய மக்கள் வங்கித் தலைவருக்கும் கூட்டமைப்புப் பிரிவு, வத்தளைக் கிளை உத்தியோகத்தர்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கம்பனியின் நலன்பெறுனர்கள் ஒவ்வொருவருக்கும் இக் கம்பனியின் பௌதீக மற்றும் நிதிரீதியான அவர்களது பங்களிப்பிற்கு எனது நன்றிகள் உரித்தாகின்றன.

இலங்கை விவசாயிகள், பொதுவாக சகல இலங்கை வாழ் மக்களின் நலனிற்காக எமது கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்கி, பெறுமதியான வழிகாட்டல்களை வழங்கிய மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சின் செயலாளருக்கும் அமைச்சின் சகல உத்தியோகத்தர்களுக்கும் பதவியணி அங்கத்தவர்களுக்கும், கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் நாடளாவிய ரீதியாக உள்ள கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

துசித்த ஹல்லொலுவ
தலைவர்
வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள்

## 1.2 பணிப்பாளர் சபை

| வகை | பணிப்பாளரின் பெயர் |
|---|---|
| தலைவர் | திரு. துசித்த ஹல்லொலுவ |
| நிறைவேற்றுப் பணிப்பாளர் | திரு. சாமிந்த குமார லியனகே |
| பணிப்பாளர் | திரு. டபிள்யூ.கே.டீ.ரீ. வராகொட |
| பணிப்பாளர் | திரு. என்.பீ.வீ.சீ. பியதிலக |
| பணிப்பாளர் | திரு. ரீ மலித் பெரேரா |
| பணிப்பாளர் | திரு. பீ.ஏ.எஸ்.ஏ.குமார |
| பணிப்பாளர் | திரு. டீ.எச்.எல். சில்வா |
| கம்பனி செயலாளர் | திரு. எஸ்பீ. மொறவக்க (சட்டத்தரணி) |

## 1.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| 1. | திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார | தலைவர் |
| 2. | திரு. என்.பீ.வீ.சீ. பியதிலக | உறுப்பினர் |
| 3. | திரு. ரீ.எம். பெரேரா | உறுப்பினர் |
| 4. | திருமதி. சுனந்தா பத்மினி | பார்வையாளர் |
| 5. | திரு. பீ.எல். நாமசேன | பார்வையாளர் |
| 6. | திரு. எச்.வீ.ஏ.ஜே. விஜேசிறி | கூட்டம் கூட்டுநர் |

## 1.4 சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| 1. | திரு. எச்.என்.ஆரியதாஸ | நிதி , நிர்வாக முகாமையாளர் |
| 2. | திரு. கே.கே. சோமசுந்தரம் | கொள்வனவு, வழங்கல் முகாமையாளர் |
| 3. | திரு. ஜே.சீ.விக்ரமசிங்ஹ | செயற்பாட்டு, விநியொக முகாமையாளர் |
| 4. | திரு. வை.ஏ.டீ.பேர்சி விஜேரத்ன | விநியோக முகாமையாளர் |
| 5. | திரு. எச்.வீ.ஏ.ஜே விஜேசிறி | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |

## 1.5 கூட்டமைப்பு ஆளுகை

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி அரச அரசியல் மற்றும் கொள்கை வழிமுறைகளை அமுலாக்குவதில் உறுதியான வெளிவாரிப் பொறிமுறைகளையும் மிகவும் சிக்கலான ஒழுங்கமைப்புச் சுற்றாடலின் மத்தியில் இயங்குகின்றது. தனியார் துறையில் காணப்பட்ட உறுதியான நேரடி நிதி நிலையுடன் பங்குதாரர்களின் குறுகிய நலனிற்குட்படுத்தப்படாது தேசிய முக்கியத்துவத்தின் பொதுக் கொள்கையுடன் தொடர்பான பாரிய பிரச்சனைகளை உறுதியான கூட்டமைப்பு ஆளுகை உள்ளடக்கியுள்ளது.

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி செயற்படும் கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனிகளின் நடவடிக்கைகளும் நடைமுறைகளும் நிறுவகக் கட்டமைப்பு மற்றும் கொள்கையால் நிர்ணயிக்கப்பட்டவையாகும். அரச கொள்கைக் கட்டமைப்பு, அரச நிகழ்ச்சித்திட்டங்கள், உயர் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மற்றும் சிறந்த கால அடிப்படையிலான இறக்குமதிகள் மற்றும் எமது உற்பத்தியான பசளையின் ஆக்கபூர்வமான விநியோகங்கள் கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி மீதான நடத்தைத் தாக்கங்களிற்கு காரணமான அடிப்படைக் காரணிகளாக அமைந்தன. ஆகையால் கூட்டமைப்பு ஆளுகை அமைப்புகளையும் நடைமுறைகளையும் நிர்ணயிக்கும் பாரிய காரணியாக ஆக்கபூர்வமான முகாமைத்துவம் அமைந்துள்ளது.

கொழும்பு கொமர்ஷல் உரங்களில் கூட்டமைப்பு ஆளுகை தனியுடமை வியாபார முயற்சிகளைப் பார்க்கிலும் மிகவும் சிக்கலானதாகவும் சவால் மிக்கதாகவும் காணப்பட்டது. நெற் பயிர்களுக்கு உரங்களை வழங்குவதில் கொழும்பு கொமர்ஷல் உரங்கள் ஈடுபட்டுள்ளமையால் இது மிகவும் அவசியமானதாக உள்ளது. நாட்டின் சகல வீட்டுப் பாவனைகளில் தேவைப்பாட்டிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கமளிக்கும் தேசிய பொருளாதாரத்தின் உபாயமார்க்கத் துறையாவதுடன் இதற்கு மேலதிகமாக எமது செயற்பாடு நாட்டின் உயிர்களுக்கும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் நேரடித் தாக்கத்தை விளைவிக்கின்றது.

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் கூட்டமைப்பு ஆளுகையின் பணிக் கட்டமைப்பு**



**மேற்குறித்த ஆளுகைக் கட்டமைப்பினூடாக பின்வருவனவற்றை கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி எய்தியுள்ளது**

**கணக்களிப்பொறுப்பு**

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் பணிப்பாளர் சபை, கம்பனியின் சொத்துக்களையும் பெறுமதியையும் பாதுகாக்கும் அதேவேளை அரசாங்க நோக்கங்களையும் ஏனைய நலன்பெறுனர்களின் தேவைப்பாட்டையும் நிறைவேற்றுவதற்கு இயலுமான சகல நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றது.

**பாங்கு**

முகாமைத்துவத்தின் மீதும் கொழும்பு கொமர்ஷல் உரங்களின் செயற்பாடுகள் மீதும் பொதுத் திறைசேரியினதும் அரச மற்றும் ஏனைய நலன்பெறுனர்களினதும் சிறந்த விருப்பைப் பேணுவதன் பொருட்டு பணிப்பாளர் சபை நிர்வாகத்தை ஆக்கபூர்மாகவும் திறன்படவும் செயற்படுத்துகின்றது.

**வெளிப்படைத்தன்மை**

கம்பனியின் நிதி, நலன்கள் மற்றும் செயற்பாடுகள், குறித்த சகல தகவல்களை உரிய நேரத்திலும் துல்லியமான முறையிலும் அரசாங்க அதிகாரிகளுக்கும், ஏனைய நலன்பெறுனர்களுக்கும் சந்தைக்கும் வழங்குவதற்கான சகல முயற்சிகளையும் பணிப்பாளர் சபை எடுத்துவருகின்றது.

**ஊக்குவிப்புக் கொடுப்பனவு**

ஆட்சேர்ப்பு, மேம்படுத்தல் மற்றும் சிறந்த தகைமையுடைய ஆளணியை சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தினராகத் தக்க வைத்துக்கொள்வதற்கான கொள்கையை பணிப்பாளர் சபை கையாள்கின்றது.

## 2. செயற்பாட்டு வெளிப்பாடுகள்

### 2.1 சந்தை நிலவரம்

2005 ஆம் ஆண்டின் அரசாங்க உர மானியத் திட்ட அமுலாக்கத்துடன் யூரியா, எம்ஓபீ மற்றும் ரீஎஸ்பீ போன்ற முக்கிய நெல் உரங்களை தலா ஒரு மெட்ரிக் தொன்னை ரூபா 7,000 இற்கு நாடெங்கிலும் பகிர்வதனை நோக்காகக் கொண்டிருந்தது. பாரியளவு தனியார் துறைக் கம்பனிகளைக் கொண்ட நெல் உரங்களின் திறந்த போட்டிச் சந்தையில் ஒருவருக்கொருவர் உயர் போட்டியிட்டு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனியுடனும் வரையறுக்கப்பட்ட கொழும்பு உரக் கம்பனியுடனும் தெரிவுசெய்யப்பட்ட அரசுடமையாக்கப்பட்ட சந்தையில் வருகின்றனர். ஏனைய பயிரினங்களுக்கான உரச் சந்தை தனியார் துறைக் கம்பனிகளுக்காக வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் இப் பாரிய செயற்பாடுகளை அமுலாக்குவதற்காக அதன் இரு கம்பனிகளான அதாவது வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனிக்கும் வரையறுக்கப்பட்ட கொழும்பு உரக் கம்பனிக்கும் ஒப்படைத்துள்ளது. கொழும்பு கொமர்ஷல் உரங்களுக்கு சந்தைப் பெறுமதியில் ஏறத்தாழ 35% ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து ஆக்கபூர்வமான போட்டியாளர் என்ற நிலையிலிருந்து திறன்வாய்ந்த இறக்குமதியாளராகவும் விநியோகஸ்தராகவும் கொழும்பு கொமர்ஷல் உரங்களின் சந்தை நிலையும் தந்திரோபாயங்களும் மாற்றம் பெற்றன.

2011 இல் மஹிந்த சிந்தனை நெல் மானிய முறை ஏனைய பயிரினங்களுக்கான உரத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டு தனியார் துறை விற்பனைகளும் அடங்கலாக ஏனைய பயிரின உரங்களுக்கான விலைகளும் தலா ஒரு மெட்ரிக் தொன்னிற்கு ரூபா 24,000 என வரையறுக்கப்பட்டிருந்தது. ஏனைய பயிரின உரங்களின் விற்பனை விலைகளின் வரையறையுடன் சந்தை தந்திரோபாயங்களாக விலைகளின் முக்கியத்துவம் மாற்றம் பெற்று சந்தை ஆக்கத்திறன் புதிய தந்திரோபாயமாகியது.

ஆகையால் விலைப் போரின் சந்தை தந்திரோபாயங்கள் திறமையானதும் ஆக்கபூவுமானதுமான சந்தைத் தந்திரோபாயங்கள் மாற்றம் பெற்றன. இதன் படி கொழும்பு கொமர்ஷல் உரங்களும் தமது தந்திரோபாயங்களைச் சீராக்கின.

## 2.2 கம்பனியின் செயலாற்றல்

2014/15 இல் கம்பனி அதன் விநியோக இலக்குகளையும் ஆண்டிற்காக இலக்கிடப்பட்ட விற்பனைப் புரள்வுகளையும் எய்தியிருந்தது. எப்போதும் காலநிலையே விளைச்சலுக்கான உரங்களின் கேள்வியை முடிவுசெய்யும் காரணியாக அமைகின்றது.

## 2.3 நிதி வெளிப்பாடுகளும் எய்தல்களும்

| | 2014/15 | 2013/14 | 2012/13 | 2011/12 | 2010/11 |
|---|---|---|---|---|---|
| **நிதிச் செயலாற்றல் (ரூபா. 000)** | | | | | |
| வருமானம் | 1,581,875 | 1,052,299 | 866,809 | 982,118 | 1,070,228 |
| தேறிய நிதிக் கிரயம் | 58,809 | 48,589 | (1,758) | 20,063 | (67,609) |
| மொத்த இலாபம் | 206,511 | 43,560 | 208,325 | 407,265 | 309.297 |
| வரிக்கு முன்னரான இலாபம் /(நட்டம்) | 436,529 | 208,985 | 181,929 | 314,143 | 326,514 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | 281,645 | 112,888 | 123,183 | 216,412 | 210,630 |
| **நிதி நிலைமை (ரூபா. 000)** | | | | | |
| மொத்தச் சொத்துக்கள் | 18,752,168 | 15,819,544 | 13,047,192 | 10,847,571 | 14,330,092 |
| பங்குதாரர்களின் நிதியம் | 1,636,228 | 1,368,583 | 1,459.950 | 1,346,767 | 1,131,546 |
| **சாதாரண பங்குகள் பற்றிய தகவல் (ரூபா)** | | | | | |
| பங்கொன்றின் உழைப்பு | 28 | 11 | 12 | 22 | 21 |



## 2.4 கம்பனியின் வரலாறு

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி, பிரித்தானியக் கம்பனியாக 1872 ஆம் ஆண்டின் போது இலங்கையில் தனது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பெரிய பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்டது. 1872 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையான 100 ஆண்டுகளுக்கு இக் கம்பனி இங்கிலாந்தில் தனது தலைமை அலுவலகத்திலிருந்து பிரித்தானியர்களால் முகாமைத்துவம் செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டிருந்தது.

1971 இன் 35 ஆம் இலக்க வியாபார முயற்சிகள் கொள்ளல் அதிகாரச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனி 1976 சனவரி 14 ஆம் திகதி அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனியாக பெயர் மாற்றம் பெற்றது.

- கொள்ளல் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து இக் கம்பனி இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகளால் முகாமைத்துவம் செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.

- 1989 ஒக்டோபர் 04 ஆம் திகதி கொழும்பு கொமர்ஷல் கம்பனி, 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், வியாபாரப் பொறுப்புகள் அல்லது அரச கூட்டுத்தாபனங்களாக மாற்றப்பட்டு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கம்பனி அதன் மொத்த பங்கு மூலதனமாக 10,000,000 பங்குகளை ஒவ்வொன்றும் ரூபா 10 ஆன ரூபா 100,000,000 வை திறைசேரிச் செயலாளரிற்கு வழங்கியது.

- 1994 யூலையில் கம்பனி அன்றைய அரசாங்கக் கொள்கையின் கீழ் தனியார்மயமாக்கியதுடன் பங்குகளின் 90% ஆனவை தனியார் முகாமைத்துவத்திற்கு மாற்றப்பட்டு எஞ்சிய 10% பொதுத் திறைசேரியில் ஊழியர்களுக்குப் பின்னர் மாற்றம் செய்யும் நோக்குடன் வைக்கப்பட்டிருந்தன.

- பொதுத் திறைசேரிக்கும் தனியார் முகாமைத்துவத்திற்கும் இடையிலான ஒப்பந்த மீறலின் காரணமாக கம்பனியில் ஏற்பட்ட ஊழியர் குழப்பம் காரணமாக 1996 இன் 29 ஆம் இலக்க அரச முயற்சிகளின் புனர் நிர்மாண அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1997 சனவரி 20 அன்று கம்பனியின் பங்குகள் மீண்டும் பொதுத் திறைசேரிக்கு உரித்தாக்கப்பட்டது.

- மீள் உரித்தாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கம்பனியின் நிர்வாகம் ஓர் தகுதிவாய்ந்த அதிகாரியின் கீழ் கொண்டுவரப்பட்டு கம்பனியின் செயற்பாட்டின் கண்காணிப்பு அன்றைய உரிய அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

- 2011 யூன் 10 ஆம் திகதி கம்பனி நிர்வாகத்திற்காகப் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது

## 2.5 2014.03.31 இல் முடிவுற்ற ஆண்டின் போதான சம்பவங்கள்

- உள்ளகப் பதவியணியினரின் திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படல்.

- தொழில்முயற்சி மூலவள திட்ட முறைமையை விஸ்தரிக்கும் நோக்குடன் தகவல் தொழிநுட்பத்தின் முன்னேற்றச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல்.

# 3. முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்

அரசாங்க உர மானியத் திட்டத்தின் கீழ் யூரியா, எம்ஓபீ ரீஎஸ்பீ எனும் மூன்று வகையான உரங்களை தலா ஒரு மெட்ரிக் தொன் ரூபா 7,000 இற்குத் தொடர்ந்து விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உரிய ஆராய்ச்சி நிறுவகங்களால் மேற்கொள்ளப்படும் சிபாரிசுடன் பெரும்போக சிறுபோகங்களான இரு போகங்களில் விளை நிலங்களை அடிப்படையாகக் கொண்டு நெற் பயிர்ச்செய்கைக்காக நாட்டின் உரங்களுக்கான தேவைப்பாட்டை தீர்மானிக்கும் அரசாங்கக் கரமாக தேசிய உரங்கள் செயலகமானது திகழ்கின்றது.

ஆகவே அரசாங்க உர மானியத் திட்டத்தின் கீழான நெல் உரங்கள் நாடெங்கிலும் 557 ஏஎஸ்சீ வலையமைப்பினூடாக தேசிய உரங்கள் செயலகத்தின் வழிகாட்டலுடன் விநியோகிக்கப்படுகின்றன.

2010 இல் ஏனைய பயிரினங்களுக்கான உரங்களும் மானியத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு தலா ஒரு மெட்ரிக் தொன் ரூபா 24,000 இற்கு விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

### விற்பனை விலைகளை அரசாங்கம் பின்வருமாறு நிர்ணயித்துள்ளது.

| | |
|---|---|
| மானிய நெல் உரங்கள் | தலா ஒரு மெ. தொன் ரூபா 7,000 |
| மானிய ஏனைய பயிரின நேரடி உரங்கள் | தலா ஒரு மெ. தொன் ரூபா 24,000 |
| மானிய ஏனைய பயிரின கலப்பு உரங்கள் | தலா ஒரு மெ. தொன் ரூபா 26,000 |

### 2014/2015 நிதி ஆண்டிற்கான விற்பனைக் கழிவுகள்

தேசிய உரங்கள் செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்டவாறு ஏசீஎஸ் ஆல் ஒரு மெட்ரிக் தொன் நெல் உரப் பையின் கொள்வனவிற்காக பின்வரும் அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

டீஎப்எஸ் களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவிற்காக ரூபா 330

ஹுணுப்பிட்டியவில் இருந்து 30 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ள ஏசீஎஸ் களுக்காக பிராந்தியக் களஞ்சியங்களிலிருந்து ஹுணுப்பிட்டிய களஞ்சியத் தொகுதியிலிருந்தான கொள்வனவிற்காக ரூபா 314

தேசிய உரங்கள் செயலகத்தின் அங்கீகாரத்துடன் ஹுணுப்பிட்டியவில் இருந்தான கொள்வனவிற்காக ரூபா 290.

இலங்கையின் நெற்பயிர்ச்செய்கைக்கான இரு பிரதான அரச உர விநியோகஸ்தர்களில் ஒருவராக கொழும்பு கொமர்ஷல் உரங்கள் திகழ்கின்றது. கொழும்பு கொமர்ஷல் உரங்களுக்கு தேசிய உரங்கள் செயலகம் நெற்பயிர்ச்செய்கைக்கான மொத்த நெல் உரங்களின் தேவைப்பாட்டில் ஏறத்தாழ 35% இனை விற்பனை செய்து விநியோகிப்பதற்கு ஒதுக்கியுள்ளது.

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் ஏனைய பயிர் உரங்களில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவையே கையாள்கின்றது.

## 3.1 வியாபார மீளாய்வு

கடந்த இரு ஆண்டுகளின் போதான நெல் மானிய விநியோக ஈடுபாடு மற்றும் ஏனைய உரங்களின் விற்பனைகள் பின்வருமாறாகும்.

| உர வகை | மொத்த அளவு மெட்ரிக் தொன் | |
|---|---|---|
| | **2014/15** | **2013/14** |
| யூரியா நெல் | 64,292.675 | 61,465.800 |
| எம்ஓபீ நெல் | 19,561.000 | 18,477.700 |
| ரீஎஸ்பீ நெல் | 16,042.200 | 15,987.700 |
| | | |
| யூரியா ஏனைய பயிரினம் | 31,304.684 | 14,006.115 |
| எம்ஓபீ ஏனைய பயிரினம் | 5,893.061 | 3,431.941 |
| ரீஎஸ்பீ பயிரினம் | 5,778.332 | 2,586.582 |
| ஏனைய உரம் | 589.116 | 506.662 |

### *மாவட்ட ரீதியாக 2014/15 நிதியாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட விற்பனைகள்*

25 மாவட்டங்களில் 18 உப களஞ்சியங்களில் விற்பனைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பின்வரும் வரைபடத்தின் மூலமும் அட்டவணையின் மூலமும் காண்பிக்கப்பட்டவாறு உயர் விற்பனைகள் அம்பாறை மாவட்டத்திலும் அநுராதபுரம் மாவட்டத்திலும் எய்தப்பட்டுள்ளன.



*மாவட்ட ரீதியாக விற்பனை விபரம் (அளவு)*

| மாவட்டம் | உரங்களின் வகை ( மெட்ரிக் தொன்னில்) | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | யூரியா | ரீஎஸ்பீ | எம்ஓபீ | (மெ.தொ) |
| அம்பாறை | 12,147 | 2,360 | 2,572 | **17,079** |
| அநுராதபுரம் | 14,939 | 3,762 | 3,230 | **21,930** |
| பதுளை | 4,847 | 962 | 1,929 | **7,738** |
| மட்டக்களப்பு | 3,074 | 587 | 573 | **4,235** |
| கொழும்பு | 3,734 | 608 | 567 | **4,909** |
| காலி | 840 | 377 | 683 | **1,900** |
| கம்பஹா | 3,905 | 648 | 1,699 | **6,252** |
| அம்பாந்தோட்டை | 3,948 | 993 | 1,169 | **6,110** |
| களுத்துறை | 932 | 478 | 909 | **2,319** |
| கண்டி | 769 | 176 | 285 | **1,230** |
| கேகாலை | 273 | 145 | 306 | **725** |
| கிளிநொச்சி | 1,239 | 284 | 330 | **1,853** |
| குருநாகல் | 10,852 | 2,752 | 3,240 | **16,844** |
| மன்னார் | 2,111 | 449 | 525 | **3,085** |
| மாத்தளை | 3,858 | 1,005 | 613 | **5,475** |
| மாத்தறை | 1,734 | 493 | 853 | **3,080** |
| மொனறாகலை | 4,203 | 1,044 | 1,051 | **6,297** |
| முல்லைத்தீவு | 843 | 191 | 222 | **1,256** |
| நுவரெலியா | 753 | 178 | 205 | **1,136** |
| பொலன்னறுவை | 5,519 | 1,248 | 1,305 | **8,072** |
| புத்தளம் | 3,338 | 794 | 894 | **5,026** |
| இரத்தினபுரி | 3,949 | 818 | 845 | **5,612** |
| திருகோணமலை | 4,246 | 930 | 1,036 | **6,212** |
| வவுனியா | 1,540 | 370 | 382 | **2,293** |
| யாழ்ப்பாணம் | 2,001 | 168 | 35 | **2,204** |
| மொத்தம் | **95,597** | **21,821** | **25,454** | **142,872** |

## 3.2 நிறுவகக் கட்டமைப்பு மற்றும் விநியோக வலையமைப்பு

உரங்களின் விலைகளும் அளவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளமையால் கம்பனியின் நலன், கம்பனியின் நிறுவகக் கட்டமைப்பினதும் விநியோகப் பாதையின் வினைத்திறனிலும் ஆக்கபூர்வத்திலும் தங்கியுள்ளது.

**கொழும்பு கொமர்ஷல் உரங்களின் நிறுவகக் கட்டமைப்பு**



## 3.3 வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்

வழங்கல் சங்கிலி நடவடிக்கைகளின் கீழ் திட்டமிடல், நிறைவேற்றல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் வழங்கல்கள் மற்றும் கப்பற்துறை முகாமையாளரால் மேற்கொள்ளப்படுகின்றது. இவர் உரங்களின் பெறுமதி சேர் பாய்ச்சல்கள் மற்றும் வழங்குனர்கள், கம்பனி, அரச நிறுவனங்களுக்கிடையேயான தொடர்புபட்ட தகவல்களுக்கும் முகாமைத்துவத்தின் கீழ் மட்டத்திற்கும் மேல் மட்டத்திற்கும் பொறுப்புடையவராவார்.

வழங்கல் சங்கிலி உபாயமார்க்கத்தில் கொழும்பு கொமர்ஷல் உரங்களின் விவசாயிகள் சமூகத்திற்கான இறுதிக்கட்ட விநியோகத்தின் போது நுகர்வோர் திருப்தியை ஏற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான முறையில் செயற்படும் சங்கிலிகளின் பிணைப்பை ஏற்படுத்துவதே பிரதான நோக்காகும். இதன் விளைவாக தேவையற்ற செலவினங்களும், நகர்வுகளும் கையாள்கைகளும் அகற்றப்பட்டு சங்கிலி பூராவும் கிரயங்கள் குறைக்கப்பட வேண்டும். ஆக்கபூர்வம் குறைத்தும் பெறுமதி சேர்க்கைக்கும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பாய்ச்சல்**



*வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள்*

**பிராந்தியக் களஞ்சியங்களின் விநியோக வலையமைப்பு**



## 3.4 மனித மூலதன சுட்டிகள்

நிறுவனத்தின் ஊழியர்கள் எமது மனிதவள மூலதனமாகக் கருதப்படுகின்றனர். கொழும்பு கொமர்ஷல் உரங்கள் படிப்படியாக எமது பதவியணியை வேலைச் சூழலுக்கான கேள்விக்கேற்ற வகையில் அதிகரித்து வலுப்படுத்திக்கொள்கின்றது.




வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி பாரியளவில் எதிர்காலத்தை பல்வகையில் வலுப்படுத்தக்கூடிய இளம் மனித மூலதனத்தை தம்வசம் கொண்டுள்ளது.

## 3.5 மனித மூலதன நிதி மீளாய்வு

| ஆண்டு | 2014/15 | 2013/14 | 2012/13 | 2011/12 |
|---|---|---|---|---|
| தலா ஒரு ஊழியருக்கான வருமானம் (ரூபா 000) | 11,547 | 7,795 | 6,719 | 7,497 |
| தலா ஒரு ஊழியருக்கான கிரயம் (ரூபா 000) | 2,056 | 836 | 956 | 1,652 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 137 | 135 | 129 | 131 |

# 4. நிதி அறிக்கையிடல்

## 4.1 பணிப்பாளர் சபையின் மீளாய்வு

### எமது உற்பத்திப் பொருள்

நாடெங்கிலுமுள்ள விவசாயச் சமூகத்தினருக்கிடையே எமது சேவை நற்பெயரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக தக்கவைத்துக் கொள்ளும் வகையில் எமது கம்பனி பணியாற்றிவருகின்றது. விவசாயச் சமூகத்தினருக்கு உரிய நேரத்தில் அரசாங்க நெல் உர மானிய நலனை விஸ்தரிப்பதிலேயே தற்போது எமது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

“கொமர்ஷல் பொஹொர எனும் எமது வியாபாரப் பெயரில் விவசாயிகள் சமூகத்தினரிடையே மிகவும் பிரபல்யமான பெயரை இக் கம்பனி கொண்டுள்ளதுடன் “கொமர்ஷல் பொஹொர எனும் வியாபாரப் பெயரின கீழ் நாடெங்கிலும் 35% ஆன நெல் உரங்களை விநியோகிக்கின்றது. வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் நெற் பயிர்களுக்கு பாரியளவான உரங்களை விநியோகிக்கும் அதேவேளை தேயிலை, தென்னை, மரக்கறி மற்றும் ஏனைய சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவான உரங்களை விநியோகித்து வருகின்றது.

### எமது வலு

2011 – 2016 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2012 – 2015 இற்கான செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டு விவசாய அமைச்சு மற்றும் தேசிய உரங்கள் செயலகத்தின் உதவியுடன் நாட்டின் மொத்தத் தேசிய உரத் தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த கொள்வனவுத் திட்ட நடைமுறையில் அமுலாக்கப்பட்டு வருகின்றது. விவசாய அமைச்சு மற்றும் தேசிய உரங்கள் செயலகத்தின் உதவியுடன் வருடாந்த விநியோகத் திட்டம் தயாரிக்கப்பட்டு கம்பனியின் சகல நலன்பெறுனர்களுக்கும் திருத்திகரமாக அமுலாக்கப்படுகின்றது.

### ஆண்டின் போதான எமது செயல் வெற்றி

சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் (IFRS) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (LKAS) இணங்க அவற்றைப் பின்பற்றி நிதி அறிக்கைகளை வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் வெளியிடுகின்றது.

கம்பனியின் நிரந்தரப் பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்கள அங்கீகாரத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது. கம்பனிப் பதவியணியின் உற்பத்தி இயலளவு மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துமுகமாக குறுங்காலப் பயிற்சி நிகழ்ச்சிநிரற்படுத்துனர்களை கொழும்பு கொமர்ஷல் உரங்கள் ஒழுங்குசெய்துள்ளது.

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் குறித்த நிதிக்காலப்பகுதியின் போது ரூபா 209 மில்லியன் தொகையான வரிக்கு முன்னைய இலாபத்தையும்இதற்கு எதிராக முன்னைய ஆண்டான 2013/14 இல் ரூபா 209 மில்லியனை உழைத்திருந்தது.

### எமது எதிர்கால வெளிப்பாடு

கம்பனி வியாபாரச் சூழல் தேவைப்பாட்டிற்குப் பொருந்தும் வகையிலான தொழில் முயற்சி மூலவள திட்ட முறைமைக்கு பிணைக்கப்பட்ட கணனி வலையமைப்பு முறைமையை அமுலாக்கும் நடைமுறையில் கொழும்பு கொமர்ஷல் உரங்கள் தற்போது செயற்பட்டுவருவதுடன் இச் செயற்பாடானது ஆரம்ப கட்டத்தில் உள்ளதுடன் 2015/2016 நிதியாண்டில் முழு அளவில் பூர்த்தியடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## எமது கூட்டமைப்பு ஆளுகை

அறிக்கை ஆண்டின் போது 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கமைய சகல பதவியணித் தேவைப்பாடுகளும் பதவி உயர்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சகல கொள்கைத் தீர்மானங்களும் தயாரிக்கப்பட்டு பாரிய உபாயமார்க்கங்கள் சபை அறையில் கலந்துரையாடப்படுகின்றன.

செயற்பாட்டு நடவடிக்கைகள் எமது வழிகாட்டல்கள், வழிநடத்தல்கள் மற்றும் மீளாய்வுகளிற்கு உட்பட்டவையாகும்.

மிகவும் நெருங்கிய ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய சகல முக்கிய விடயங்களும் முகாமைத்துவக் குழுவிற்கு தொடர்புபடுத்தப்படுகின்றன.

மீளாய்வாண்டின் போது ஆறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. சிரேஷ்ட முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டு வினைத்திறன்வாய்ந்ததும் பயனுறுதிவாய்ந்ததுமான செயற்பாட்டு விளைவுகளை எய்தும் நோக்கில் விபரமான நிகழ்ச்சித்திட்டங்களையும் வேலைத்திட்டத்தையும் தயாரிக்கின்றது.

திரு. துசித்த ஹல்லொலுவ
***தலைவர்***

திரு. சாமிந்த குமார லியனகே
***நிறைவேற்றுப் பணிப்பாளர்***

திரு. டபிள்யூ.கே.டீ.ரீ. வராகொட
***பணிப்பாளர்***

திரு. என்.பீ.வீ.சீ. பியதிலக
***பணிப்பாளர்***

திரு. ரீ மலித் பெரேரா
***பணிப்பாளர்***

திரு. பீ.ஏ.எஸ்.ஏ.குமார
***பணிப்பாளர்***

திரு. டீ.எச்.எல். சில்வா
***பணிப்பாளர்***

திரு. எஸ்பீ. மொறவக்க (சட்டத்தரணி)
***கம்பனி செயலாளர்***

## பணிப்பாளர் பொறுப்புக் கூற்று

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) மற்றும் 151 ஆம் பிரிவுகளின் கீழான தேவைப்பாட்டிற்கு அமைவாக நிதியாண்டிற்கான கம்பனியின் விபரமான வருமானக் கூற்றையும் நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறான கம்பனியின் உண்மையானதும் நியாயமானதுமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு நிதியாண்டிற்குமான நிதிக்கூற்றுக்களையும் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர்.

148 ஆம் பிரிவின் கீழ், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளமையை நியாயமான துல்லியத்தன்மையுடனும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு அந் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு உடனுக்குடனும் முறையாகவும் மேற்கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்துவது பணிப்பாளர்களது பொறுப்பாகும்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒருமைப்பாட்டிற்கும் குறிக்கோளுக்குமான பொறுப்பை சபை ஏற்றுக்கொள்கின்றது. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டு நியாயமானதும் வெளிப்படையுமான தீர்ப்புகள் எடுக்கப்பட்டு கொடுக்கல்வாங்கல்களின் வடிவமும் கருப்பொருளும் முறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தும் பொறுப்பை பணிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள; (SLFRS), இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

மேலும், கம்பனி அதிகாரச்சட்டத்தால் தேவையான தகவல்களை நிதிக்கூற்றுக்கள் வழங்குகின்றன.

பணிப்பாளர்கள், கம்பனி பற்றிய தமது அறிவு, முக்கிய செயற்பாடுகள் மற்றும் குறித்த விசாரணைகளின் மூலம் அடுத்துவரும் ஆண்டில் தொடந்து செல்லும் அடிப்படையில் போதிய மூலவளங்கள் உள்ளன என்பது குறித்த அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். இந் நிதிக்கூற்றுக்கள் அவ் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள், கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நியாயமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் அது தொடர்பாக மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டறிந்து தடுக்கும் நோக்குடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை முறைப்படி செயற்படுத்தியுள்ளனர். கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 56(2) ஆம் பிரிவின் தேவைப்பாட்டின் படி தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள பங்கிலாபத்தைப் பகிர்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அப் பகிர்வை அடுத்து கடன் தீர்வுத்திறன் ஆய்வில் திருப்திநிலையில் கம்பனி நிலவும் என்பது குறித்து கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 57 ஆம் பிரிவின் படி, கிடைக்கப்பெற்ற தகவலை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வாளர்களிடமிருந்து தற்போது பரிந்துரைக்கப்பட்ட பங்கிலாபம் தொடர்பான கடன் தீர்வுத்திறன் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பொறுப்புகள் குறித்து கணக்காய்வாளர்களின் அறிக்கை -31 ஆம் பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

## இணக்கப்பாட்டு அறிக்கை

நிதி நிலைமை திகதியில் உள்ளவாறு கம்பனி தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய அரசாங்க மற்றும் ஊழியர்களுக்கான சகல நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் தமது சிறந்த அறிவிற்கமைய செலுத்தப்பட்டும் தேவையான சந்தர்ப்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்டும் உள்ளவதாக பணிப்பாளர்கள் உறுதியளித்துள்ளனர்,

எஸ்.பீ.மொறவக்க
சபையின் கட்டளைக்கமைய
வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள்
செயலாளர்கள்

## தலைவரினதும் நிதி முகாமையாளரினதும் பொறுப்புக் கூற்று

2015 மார்ச் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்களின் நிதிக்கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டம்.

- பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட கூட்டமைப்பாளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் உரிய முறையலும் தொடர்ச்சியாகவும் நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளில் விளக்கப்பட்டவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை நாம் உறுதிப்படுத்துகின்றோம். குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் எதுவித மாற்றங்களும் இன்றி பிரயோகிக்கப்பட்டுள்ளன. உயர் தீர்ப்பிலும் சிக்கல்வாய்ந்த விடயங்களுடனும் தொடர்புபட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் மதிப்பீடுகளும் கணக்காய்வுக் குழுவுடனும் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பாதுகாப்பதற்கும், மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்கும், கணக்கீட்டுப் பதிவேடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை உருவாக்கும் போதும் போதியளவு முறையான கவனத்தை எடுத்துள்ளோம். இவை தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டுள்ளன. கம்பனி உள்ளகக் கணக்காய்வாளர்களால் காலத்திற்குக் காலம் நடாத்தப்படும் கணக்காய்வுகளின் மூலம் கம்பனியால் உருவாக்கப்பட்ட கொள்கைகளும் கோட்பாடுகளும் தொடர்ந்து பின்பற்றப்பட்டுள்ளமைக்காக நியாயமான உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், உள்ளகக் கட்டுப்பாடுகளிலும் கணக்கீட்டிலும் ஏதேனும் முறைமையால் வழங்கப்படும் உறுதிப்பாட்டை அளவிடுகையில் உள்ளார்ந்த வரையறைகள் காணப்படுகின்றன.

கம்பனியின் கணக்காய்வுக் குழுவானது, கணக்காய்வுகளின் ஆக்கத்திறனை மீளாய்வு செய்து, கணக்காய்வு, உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிதி அறிக்கையிடல் பற்றிய பிரச்சனைகளை உள்ளகக் கணக்காய்வாளர்களுடனும் சுதந்திரமான கணக்காய்வாளர்களுடனும் காலத்திற்குக் காலம் சந்திப்பை நடாத்தி கலந்தாலோசித்து வருகின்றது. சுதந்திரமான கணக்காய்வாளர்களும் உள்ளகக் கணக்காய்வாளர்களும் கணக்காய்வுக் குழுவினருடன் ஏதேனும் விடயம் குறித்து கலந்தாலோசனைகளை நடாத்துவதற்கு முழுமையான விருப்பிற்குரிய வகையில் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டன.

.....................................

திரு. துசித்த ஹல்லொலுவ

***தலைவர்***

.......................................

திரு. எச்.என்.ஆரியதாஸ

**நிதி முகாமையாளர்**

தலைவர்,
வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் உரக் கம்பனி

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் உரக் கம்பனியின் 2015 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் உரக் கம்பனியின் 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினையும் உள்ளடக்கிய 2015 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அக்கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. செயற்பாடு மற்றும் செயலாற்றல் தொடர்பான முகாமைத்துவ அறிக்கையொன்று கம்பனியின் தலைவருக்கு 2015 ஆகஸ்ட் 21 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் உரக் கம்பனி 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இற்கமைய மீளாய்வாண்டிற்கான ஓய்வூதிய நலன் சம்பந்தமாகக் கணக்கீடு மேற்கொள்கையில் தற்போதைய சேவைக் கிரயம், வட்டிக் கிரயம் மற்றும் ஆயுட் கணிப்பீட்டு இலாபம் மற்றும் நட்டம் என்பவற்றை இனங்கண்டு நியம அலகு முறைப்படி கணிப்பிடப்பட்டுக் காட்டப்படவில்லை.

### 2.2.2 இணக்கமின்மை

ஹுனுப்பிட்டிய தலைமைக் களஞ்சியத்தின் 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான கையிருப்புப் புத்தகங்களின் பிரகாரம், உரக் கையிருப்பு 23,911.22 மெட்றிக் தொன்னாகும். எனினும், நிதிக்கூற்றுக்களின்படி அது 23,522.95 தொன் ஆகியமையால் 388.27 தொன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான வர்த்தகக் கடன்பட்டோர் மீதி ரூபா 56,957,862 ஆகும். 45 கமநல சேவை நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியாகிய ரூபா 11,791,091 அதில் உள்ளடங்கியிருந்தது. அதில் 24 கமநல சேவை நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதி ரூபா 5,281,596 ஆகும். மேற்படி கடன் மீதியை அறவிடுவதற்குப் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) இலங்கை உரக் கம்பனியிடமிருந்து 2007/2008 தொடக்கம் 2010/2011 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 8,042,989 கூட்டுத்தொகையானது மீளாய்வாண்டு முடிவு வரை அறவிடப்படாதிருந்தது.

(இ) கடன்பட்டோரின் பொருட்டு ரூபா 25,761,062 நட்டக் கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், அதன் பொருட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ஈ) உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான காலந்தொட்டு இருந்து வரும் ரூபா 36,171,884 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 05/2014 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2002 மே 24 ஆந் திகதிய PF/PE/21 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | மிகையூதியக் கொடுப்பனவின் பொருட்டு வருடாந்தக் கணக்குகளைக் குறித்த தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அதற்கு முரணாக 2013/2014 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் 03 மாத தாமத்தின் பின்னர் 2014 ஆகஸ்ட் 04 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ஊழியர் ஒருவருக்கு ரூபா 13,500 எனும் வீதப்படி ரூபா 1,219,500 மிகையூதியக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுமிருந்தது. |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| (i) பந்தி 5.4.8(அ) பந்தி | மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத் தொகையில் 5 சதவீதத்திற்குக் குறையாக செயலாற்றல் பிணை முறி வழங்குநர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதும், போக்குவரத்து ஒப்பந்தகாரர்கள் செயலாற்றல் பிணை முறியைச் சமர்ப்பிக்காத 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ii) பந்தி 5.4.8(ஆ) பந்தி | செயலாற்றல் பிணை முறியைச் சமர்ப்பித்திருந்த ஒப்பந்தகாரர்களது பிணை முறிகளது செல்லுபடிக் காலம் வேலை முடிவை எதிர்பார்க்கும் நாளின் பின்னர் 28 நாட்கள் வரை செல்லுபடியாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அவ்வாறு வேலை முடிவடைந்ததன் பின்னர் 28 நாட்களுக்கான செல்லுபடியாகும் செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிராத 14 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 2.5 போதிய அதிகாரத்தால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டிற்கு போக்குவரத்து வசதிகளை வழங்கியதற்கான கொடுப்பனவை வழங்குவதற்கு 2014 டிசெம்பர் 22 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் திறைசேரியினது அங்கீகாரம் பெறப்பட்டுக் கொடுப்பனவு செய்யப்படலாம் என சிபார்சு செய்யப்பட்டிருக்கையில், அந்த அங்கீகாரத்தைப் பெறாது 2014 டிசெம்பர் 29 ஆந் திகதியன்று சபைக்கு ரூபா 1,080,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய உரச் செயலகத்திலிருந்து அங்கீகாரத்தைப் பெறாது 2013/2014 ஆம் ஆண்டின்போது 4,771.04 மெட்றிக் தொன் நெல் வயல்களுக்கான உரம் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான உரமாக விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், 2014/2015 ஆம் ஆண்டின்போது ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கென இறக்குமதி செய்யப்பட்ட 4,771.04 மெற்றிக் தொன் உரம் நெல் வயல்களுக்கான பசளைக்கு மாற்றஞ் செய்யப்பட்டுமிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதிலான கம்பனியின் செயற்பாட்டினாலான நிதிசார் விளைவுகள் ரூபா 436,529,170 வரிக்கு முன்னரான நிகர இலாபம் ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 208,984,673 ஆகும். மீளாய்வாண்டினது இலாபத்தை முன்னைய ஆண்டின் இலாபத்துடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 227,544,497 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. விற்பனைகளும் மானியமும் ரூபா 162,951,183 அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 74,184,116 அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணிகளாக அமைந்தன.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதிசார் விளைவுகளை ஒப்பிடுகையில் கீழே குறிப்பிடப்பட்ட வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நெல் வயல்களுக்கான உரத்தின் விற்பனை 8 சதவீதத்தாலும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான உரத்தின் விற்பனை 106 சதவீதத்தாலும் அதிகரித்ததன் காரணமாக ஒட்டு மொத்த விற்பனை 50 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) நெல் பயிர்ச் செய்கைக்கான இலாப எல்லை மெற்றிக் தொன் ஒன்றிற்கு ரூபா 350 ஆகவும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான எல்லை ரூபா 4,000 ஆகவும் இருந்தமையால் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான உர விற்பனை 116 சதவீதம் அதிகரித்து அதன் காரணமாக மொத்த இலாபம் 374 சதவீதம் அதிகரித்திருந்தது.

(இ) குறித்த தினத்தில் திறைசேரியால் உர மானியம் வழங்கப்படாமையால் செலாவணிக் கொடுப்பனவை ஈடு செய்வதற்கு கம்பனி குறுகிய காலக் கடனாகப் பெற்றிருந்த தொகை ரூபா 6,715,562,085 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 156 சதவீத அதிகரிப்பாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை

2014 டிசெம்பர் 03 ஆந் திகதியன்று சப்புகஸ்கந்த உரக் களஞ்சியத்தில் 56690 ஆம் இலக்க வழங்கல் கட்டளைப் பிரகாரம் 17.5 மெற்றிக் தொன் உரம் அக்கரைப்பற்று களஞ்சியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த உரக் கையிருப்பு 2015 பெப்ரவரி 11 ஆந் திகதி களஞ்சியத்தில் ஒப்படைக்கப்பட்டு அதனைப் பெற்றுக்கொண்டதாக 56521 ஆம் இலக்க பொருட் பெறுவனவுத் தாள் வழங்கப்பட்டிருந்தது. பிரதேசக் களஞ்சியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட உரக் கையிருப்புப் பைகளில் குறிப்பிடப்பட்ட உடன்படிக்கை இலக்கம் 2014/CCF/UR/02 ஆகும். எவ்வாறாயினும், களஞ்சியம் பொறுப்பேற்ற கையிருப்புக்கான பைகளில் குறிப்பிடப்பட்டிருந்த இலக்கம் 2014/CCF/UR/07 ஆகும். ஆகவே, கையிருப்புப் பைகளில் குறிப்பிடப்பட்டிருந்த உடன்படிக்கை இலக்கங்கள் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டிருந்தமை கணக்காய்வின்போது பிரச்சினைக்குரியதாக அமைந்தது.

**4.2 செயற்பாட்டு செயற்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 ஆகஸ்ட் 05 ஆந் திகதியன்று கந்தளாய் பிரதேச களஞ்சியத்தில் கிடைக்கப் பெற்ற 16.69 மெற்றிக் தொன் உரமானது 2015 ஜனவரி 05 ஆந் திகதியளவிலும் விற்பனை செய்யப்படாதிருந்தது.

(ஆ) கண்டி பிரதேச களஞ்சியத்திற்கு 2014 ஜனவரி 27 ஆந் திகதியன்று கிடைக்கப் பெற்ற ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான 7.8 மெற்றிக் தொன் உரமானது மெதுவாக நகரும் உரக் கையிருப்பாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின்போது 10 மாவட்டங்களில் உரப் போக்குவரத்து நடவடிக்கைகளைப் பொறுப்பேற்ற 05 ஒப்பந்தக்காரர்கள் தொடர்ச்சியாகக் குறித்த எண்ணிக்கையிலான லொறிகளை வழங்க முடியாது போன 10 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. போக்குவரத்து உடன்படிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நாளொன்றுக்கு ரூபா 1,500 வீதம் தண்டப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது நோக்கங்களுக்கு முரணாக நலன்புரி நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 575,000 நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின்போது கம்பனியின் பதவியணியினருக்கு ஊக்குவிப்புப் படியாக ரூபா 11,008,504 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கம்பனியின் ஊழியர் அல்லாத தலைவருக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புப் படியான ரூபா 180,000 இதில் உள்ளடங்கியிருந்தது.

**4.4 இனங்காணப்பட்ட இழப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரத்தைக் கொண்டு செல்கையில் நியமங்களுக்கு ஒவ்வாத வண்ணம் பைகளில் அடைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின்போது ரூபா 11,450,095 தொகையான கையிருப்பு இழப்பிற்குள்ளாகியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது இரு பிரதேச களஞ்சியங்களில் மேற்கொண்ட கையிருப்புச் சரி, பிழை பார்த்தலின்போது ரூபா 5,019,471 தொகையான 90.75 மெற்றிக் தொன் கையிருப்பு குறைவாக இருக்கக் காணப்பட்டபோதும், அதனைப் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது அனுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் உரத்தைக் கொண்டு செல்வதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் போதிய லொறிகளை வழங்காமையால் பிரத்தியேக லொறிகளைப் பயன்படுத்தி உரத்தை எடுத்துச் சென்றமையால் கொடுப்பனவு செய்யப்பட்ட போக்குவரத்துக் கட்டணம் ரூபா 2,725,513 ஆகும்.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2014 மே 12 தொடக்கம் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சப்புகஸ்கந்த உரக் களஞ்சியக் கையிருப்பு 2014 டிசெம்பர் 03 ஆந் திகதியளவில் முடிவடைந்திருந்தது. எனினும், களஞ்சியத்தைத் திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்காது 2015 பெப்ரவரி 11 ஆந் திகதி வரை வெற்றுக் களஞ்சியத்திற்கு 2 மாத வாடகையாக ரூபா 1,774,271 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.6 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 செப்டம்பர் முதல் 2014 ஆகஸ்ட் வரை கம்பனியில் தொழிலாளர்களது சேவையை நடாத்துவதற்கான கூறு விலைகளைக் கோருவதற்கு ரூபா 23,184 புதினப் பத்திரிகைப் பிரசுரங்களுக்கு 2013 ஜுலை மாதத்தில் செலவிடப்பட்டிருந்தது. நியாயமான காரணம் குறிப்பிடப்படாது அதற்கு அடுத்த நாளே ரூபா 10,080 செலவிடப்பட்டு அப் பிரசுரத்தை இரத்துச் செய்வதற்காக அதே புதினப் பத்திரிகையில் மீண்டும் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை

தொடர்ச்சியாக தனியார் ஒருவருக்கு தொழிலாளர் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) **தலைமை அலுவலகத்தில் வாகனத் தரிப்பிடப் பிரிவு ஒன்றை நிர்மாணித்தலுக்கான வழங்கல்**

(i) குறித்த நிர்மாண வேலை தொடர்பாக விரிவான மதிப்பீடு, அளவிடைப் பத்திரம் திட்டம் என்பவற்றைத் தயாரிப்பதற்குத் தகைமை வாய்ந்த ஒருவரது உதவி பெறப்படவில்லை.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பந்திக்கு முரணாக கூறு விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு 8 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.2 இன் படி வேலை முடிவுற்றதைக் குறிக்கும் பொறியியலாளரது / உசாத்துணையாளரது சான்றிதழின்றி ரூபா 669,773 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) அவ்வாறே, மதிப்பீட்டையும் திட்டத்தையும் தயாரித்த உத்தியோகத்தரே தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கத்தவர் ஒருவராகப் பங்குபற்றியுமிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2015 ஜூலை 05 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுக் கூட்டத்தில் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்துடன் கம்பனியில் ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவிற்கான அவசியம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தபோதும், 2014 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவில் தயாரிக்கப்பட்டிருந்த நடைமுறைக்கு 2015 ஆகஸ்ட் 20 வரை பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பெயர் வழிக் கோவைகளைப் பேணுதல்

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) உர விநியோக நடைமுறை

(ஈ) வாகனக் கட்டுப்பாடு

ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

| **மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானவை** | குறிப்பு | **2015** | **2014** |
|---|---|---|---|
| வருமானம் | 13 | 1,566,271,696 | 1,041,775,830 |
| விற்பனைக் கிரயத்தின் மீதான மானியம் | 14 அ | 6,072,507,580 | 5,365,407,153 |
| விற்பனைக் கிரயம் | 14 ஆ | (7,432,268,472) | (6,363,623,362) |
| மொத்த இலாபம் | | 206,510,804 | 43,559,621 |
| நிறுவக மேந்தலைகள் மீதான மானியம் | 14 இ | 227,672,835 | 164,085,974 |
| ஏனைய வருமானம் | | '2,694 | 54,675,903 |
| | | 508,556,333 | 262,321,498 |
| நிர்வாகச் செலவினங்கள் | | (97,718,759) | (89,074,702) |
| விற்பனை விநியோகக் கிரயம் | | (32,509,774) | (11,816,817) |
| ஏனைய செலவினங்கள் | | (607,163) | (1,034,547) |
| செயற்பாட்டிலிருந்தான இலாபம் | | 377,720,637 | 160,395,432 |
| தேறிய நிதிக் கிரயம் | 16 | 58,808,532 | 48,589,241 |
| நிதி வருமானம் | 16.அ | (66,803,684) | (75,903,220) |
| நிதிச் செலவினங்கள் | 16.ஆ | 7,995,152 | 27,313,980 |
| **வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | 17 | **436,529,170** | **208,984,673** |
| வருமான வரிச் செலவினங்கள் | 18 | (154,884,132) | (96,097,031) |
| **ஆண்டிற்கான தேறிய இலாபம்** | | **281,645,038** | **112,887,642** |
| தலா ஒரு பங்கிற்கான உழைப்பு | 19 | 28.16 | 11.29 |
| ஏனைய விபரமான வருமானம் | | | |
| ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானம் | | **281,645,038** | **112,887,642** |

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

**2015 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2014/2015<br>ரூபா | 2013/2014<br>ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறையில்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதன, பொறி, உபகரணம் | 20 | 338,728,081 | 327,945,303 |
| மூலதன நடைபெறும் வேலை | 21 | 1,078,857 | 1,078,857 |
| | | **339,806,938** | **329,024,160** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பதிவேட்டுப் பொருட்களும் ஏனைய நுகர்வுப்பொருட்களும் | 23 | 356,056,506 | 138,343,689 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 24 | 17,001,876,435 | 14,415,302,158 |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | 25 | 11,872,818 | 9,542,247 |
| வைப்புகளும் முற்பணங்களும் | 26 | 14,898,179 | 4,266,032 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 27 | 364,874,542 | 333,016,116 |
| வங்கியிலுள்ள காசு | 28 | 662,782,813 | 590,049,718 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **18,412,361,292** | **15,490,519,960** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **18,752,168,230** | **15,819,544,120** |
| | | | |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| பரிந்துரைக்கப்பட்ட மூலதனம் | 29 | 100,000,000 | 100,000,000 |
| மூலதன ஒதுக்கம் | 30 | 1,683,685 | 1,683,685 |
| மீள் நிர்மாணிப்பு மற்றும் மீள் பெறுமதி ஒதுக்கம் | 31 | 288,947,577 | 288,947,577 |
| பகிரப்படாத உழைப்புகள் | | 1,245,596,942 | 977,951,904 |
| | | **1,636,228,203** | **1,368,583,166** |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 32 | 11,912,670 | 9,179,603 |
| பிற்போடப்பட்ட வரி | 33 | 52,701,495 | 53,028,316 |
| வட்டிக் கடன்கள் | 34 | 1,472,280,899 | 5,005,000,899 |
| | | 1,536,895,064 | 5,067,208,818 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வட்டிக் கடன்கள் | 34 | 11,010,460,928 | 4,294,898,843 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 35 | 4,420,610,316 | 4,758,679,621 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் | 36 | 12,000,000 | 10,000,000 |
| பெறப்பட்ட வைப்புகளும் முற்பணங்களும் | 37 | 18,983,437 | 20,482,324 |
| செலுத்த வேண்டிய நியதிச்சட்டக் கடப்பாடுகள் | 38 | 95,107,433 | 262,397,559 |
| நிலுவைச் செலவினங்கள் | 39 | 21,882,848 | 37,293,789 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **15,579,044,963** | **9,383,752,136** |
| | | | |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | **18,752,168,230** | **15,819,544,120** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக ந உறுதிப்படுத்துகின்றேன். 7 ஆம் பக்கத்திலிருந்து 35 ஆம் பக்கம் வரையான பக்கங்களிலான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைந்த பகுதியாக உள்ளன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக ந உறுதிப்படுத்தப்படுகின்றது.

**நிதி முகாமையாளர்**
திரு. எச்.என்.ஆரியதாஸ

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பு பணிப்பாளர் சபையினதாகும். பணிப்பாளர்களுக்காக அவர்கள் சார்பாகவும் கையொப்பமிட்டவர்கள்.

**தலைவர்**
திரு. துசித்த ஹல்லொலுவ
2015 யூலை 08 ஆம் திகதி கொழும்பில

**பணிப்பாளர்**
பீ.எஸ்.ஏ.அத்துல குமார

*(இலங்கை ரூபாக்களில் வளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

**உரிமை மூலதன மாற்றக் கூற்று**

| | பங்கு மூலதனம் | மூலதன ஒதுக்கம் | வருமான ஒதுக்கம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பகிரப்படாத வருமானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **2013 மார்ச் 31 இல் உள்ளவாறான பகிரப்படாத மீதி -** | **100,000,000** | **1,683,685** | **-** | **288,947,577** | **875,064,262** | **1,265,695,521** |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/ நட்டம் | - | - | - | - | 112,887,642 | 112,887,642 |
| பங்கிலாபம் | - | - | - | - | (10,000,000) | (10,000,000) |
| **2014-03.31 இல் உள்ளவாறான பகிரப்படாத மீதி** | **100,000,000** | **1,683,685** | **-** | **288,947,577** | **977,951,904** | **1,368,583,163** |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/ நட்டம் | - | - | - | - | 281,645,038 | 281,645,038 |
| பங்கிலாபம் | - | - | - | - | (14,000,000) | (14,000,000) |
| **2015-03.31 இல் உள்ளவாறான பகிரப்படாத மீதி** | **100,000,000** | **1,683,685** | **-** | **288,947,577** | **1,245,596,942** | **1,636,228,202** |

*அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழித்தலைக் குறிக்கின்றது.*

**2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சற் கூற்று**

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | | 436,529,170 | 208,984,673 |
| **சீராக்கங்கள்;** | | | |
| பெறுமானத் தேய்வு | | 23,520,969 | 17,952,199 |
| ஆதன, இயந்திர உபகரணங்களின் சேதஇழப்பு | | 182,228 | - |
| ஆதன, இயந்திர உபகரணங்களின் விற்பனை | | (1,736,230) | - |
| ஆண்டிற்கான பணிக்கொடைக் கட்டணம் | | 2,882,050 | 2,882,050 |
| வட்டி வருமானம் | | (66,803,684) | (75,903,220) |
| வட்டிச் செலவினங்கள் | | 7,995,152 | 27,313,980 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | | **402,569,654** | **181,229,681** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | | |
| பதிவுப் பொருட்கள் | | (217,712,817) | 46,305,380 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | | (2,586,574,277) | (2,648,707,866) |
| வைப்புகளும் முற்பணங்களும் | | (10,632,147) | 3,298,014 |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | | (2,330,571) | 1,859,725 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | | (338,069,305) | 4,231,572,011 |
| நியதிச்சட்டப்படியான பெறவேண்டியவைகள் | | (3,200,285) | (4,053,963) |
| நியதிச்சட்ட செலுத்த வேண்டியவைகள் | | (29,534,085) | - |
| பெறப்பட்ட வைப்புகளும் முற்பணங்களும் | | (1,498,887) | 4,879,648 |
| அட்டுறு செலவினங்களும் ஏற்பாடும் | | (15,410,941) | 18,602,245 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருநந்து உருவான காசு** | | **(2,802,393,660)** | **1,834,984,876** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | (148,983) | (124,248) |
| செலுத்தப்பட்ட வட்டி | | (7,995,152) | (27,313,980) |
| செலுத்தப்பட்ட வரி | | (289,766,710) | (70,085,969) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(3,100,304,504)** | **1,737,460,679** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | (34,485,975) | (121,955,444) |
| ஆதன, இயந்திர உபகரணங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்டவை | | 1,736,230 | - |
| ஏனைய நிதிச் சொத்துக்களில் தேறிய முதலீடு | | (31,858,426) | (38,684,359) |
| பெற்ற வட்டி | | 66,803,684 | 75,903,220 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | **2,195,513** | **(56,623,471)** |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| பெற்ற அரசாங்க மானியங்கள் | | | |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | | (12,000,000) | (10,000,000) |
| ஆண்டின் போதான கடன்கள் | | 6,771,039,645 | 9,299,899,742 |
| ஆண்டின் போதான கடன்களின் தீர்ப்பனவுகள் | | (3,588,197,559) | (10,715,949,860) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | **3,170,842,085** | **(1,426,050,118)** |
| **ஆண்டின் போதான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய மாற்றங்கள்** | | **72,733,095** | **254,787,090** |
| ஆண்டின் ஆரம்பத்தில்லான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | | 590,049,717 | 335,262,628 |
| **ஆண்டின் இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | **(குறிப்பு) 28** | **662,782,813** | **590,049,717** |

*அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழித்தலைக் குறிக்கின்றது.*

# 1. கூட்டமைப்புத் தகவல்

## 1.1 அறிக்கையிடல் நிறுவனம்

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி, (“கம்பனி”யானது) 1989 ஒக்டோபர் 04 ஆம் திகதி 1982 இன் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டமைக்கப்பட்டு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2011 யூலை 15 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு இலங்கையில் நிலையகமுற்று இலங்கை அரசாங்கத்தால் உரித்தாக்கப்பட்டிருந்தது.

பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் கம்பனியின் வணிக இடமும் ஹுணுப்பிட்டிய, வத்தளையில் அமைந்துள்ளது.

## 1.2 கம்பனி

கம்பனி ஆரம்பத்தில் நெல், தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் பிற பயிர்களுக்குத் தேவையான உரங்களை இறக்குமதி செய்தல், கலத்தல் மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டிருந்தது.

## 1.3 நிதியாண்டு

கம்பனியின் நிதி அறிக்கைக் காலப்பகுதி மார்ச் 31 அன்று முடிவுறுகின்றது.

## 1.4 வழங்கலுக்கு அங்கீகரிக்கப்பட்ட திகதி

கம்பனிப் பணிப்பாளர்கள் சபை நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பணத்திற்கும் பொறுப்பானவர்கள். கம்பனியின் 2015 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 நவம்பர் 08 ஆம் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி வழங்கப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டது.

## 1.5 ஊழியர்களின் எண்ணிக்கை

கம்பனி ஊழியர்களின் எண்ணிக்கை

| 31 மார்ச் 2015 | | 31 மார்ச் 2014 | |
|---|---|---|---|
| • நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 19 | • நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 19 |
| • எழுதுவினைஞர்கள் | 106 | • எழுதுவினைஞர்கள் | 102 |
| • ஊழியர் | 12 | • ஊழியர் | 12 |
| | **137** | | **133** |

# 2. தயாரிக்கும் அடிப்படை

## 2.1 இணக்கக் கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் (CASL) விநியோகிக்கப்பட்ட (SLFRS எனக் குறிப்பிடப்படும்) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படியும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளின் படியும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டு அடிப்படை

நிதி நிலைமைக் கூற்றின் பின்வரும் முக்கிய விடயங்கள் தவிர நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- காணி கட்டிடங்கள் 2007.03.12 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- இலாப நட்டங்களின் ஊடாக நியாயப் பெறுமதியிலான நிதிக் கருவிகள் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு உள்ளபடி பெறுமதியிடப்பட்டு வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

### 2.3 செயற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்

கம்பனியின் செயற்பாட்டு நாணயமாகவும் நிறுவகம் செயற்படும் அடிப்படைப் பொருளாதாரச் சூழலில் பயன்படுத்தப்படுமான இலங்கை ரூபா (இலரூபா) இல் நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்படும் சகல இலங்கை நிதித் தகவல்களும் வேறாக எடுத்துரைக்கப்பட்டால் அன்றி கிட்டிய ரூபா பெறுமதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

### 2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்வுகள் மற்றும் எதிர்வுகூறல்கள்

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தில் தாக்கம் செலுத்துவனவற்றிற்கு முகாமைத்துவம் மதிப்பீடுகள், தீர்வுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு வேண்டப்படுகின்றது. இம் மதிப்பீடுகளினின்றும் உள்ளபடியான விளைவுகள் வேறுபடக்கூடியன. ஓர் தொடர் அடிப்படையில் மதிப்பீடுகளும் எதிர்வுகூறல்களும் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீட்பு, மதிப்பீடுகள் மீட்கப்பட்ட காலப்பகுதிக்கும் தாக்கமளிக்கும் ஏதேனும் எதிர்காலப்பகுதிகளுக்கும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

#### 2.4.1 ஆதனம், பொறி மற்றும் உபகரண மீள்மதிப்பீடு

கம்பனி அதன் காணியை ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நியாயப் பெறுமதியிலான மாற்றங்களுடன் மீள்பெறுமதியிடப்பட்ட தொகைகளில் வெளிப்படுத்துகின்றது. அரசாங்க மதிப்பீட்டாளரை கம்பனி ஈடுபடுத்தி 2007.03.12 இல் உள்ளவாறான நியாயப் பெறுமதியை நிர்ணயிக்கின்றது. மேலும் காணியின் விபரங்கள் குறிப்பு 22 இல் விளக்கப்பட்டுள்ளது.

#### 2.4.2 நிதியல்லாச் சொத்துக்களின் சேத இழப்பு

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் பெறுமதி அல்லது பண மீட்டல் அலகு அதன் அறவீட்டுத் தொகையை மிகைக்குமாயின் அதன் நியாயப் பெறுமதி விற்பனைக் கிரயத்திலும் அதன் பயன்பாட்டுப் பெறுமதியும் அதிகரிக்குமாயின் சேத இழப்பு வெளிப்படுத்தப்படுகின்றது. நியாய பெறுமதியிலிருந்து விற்பனைக் கிரயங்கள் கழிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கணிப்பீடு, சொத்துக்களின் அகற்றலுக்காக பெருகும் கிரயங்களை அவதானிக்கப்பட்ட சந்தை விலைகளிலிருந்து கழித்து அல்லது அதே சொத்துக்களின் கைக்கெட்டிய கொடுக்கல்வாங்கல்களிலான விற்பனைக் கொடுக்கல்வாங்கல்களையும் பிணைப்பதிலிருந்தான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. பயன்பாட்டுப் பெறுமதிக் கணிப்பீடு கழிவுக் காசுப்பாய்ச்சல் முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.4.3 ஓய்வூதிய நலன்கள்

வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்தின் கிரயம் உள்ளபடியான மதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் உள்ளபடியான விருத்திகளிலிருந்து மாறுபடக்கூடிய பல்வேறு ஊகங்களைக் கொண்டு உள்ளபடியான பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை கழிவு விகிதம், எதிர்கால சம்பள உயர்வுகள் மற்றும் இறப்பு விகிதங்களின் நிர்ணயிப்புகளை உள்ளடக்கியுள்ளன. மதிப்பீட்டின் சிக்கல் நிலை காரணமாகவும் அடிப்படை ஊகங்கள் மற்றும் அவற்றின் நீண்ட கால இயல்பு, ஓர் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடு இம் மாற்றங்களிற்கு மிகவும் உணர்திறன் வாய்ந்தவையாகும். சகல ஊகங்களும் ஒவ்வொரு அறிக்கைத் திகதியின் போது மீளாய்வு செய்யப்படுகின்றன.

### 2.4.4 நிதிசார் கருவிகளின் நியாயப் பெறுமதி

நிதி நிலைமைக் கூற்றில் பதியப்படும் நிதிசார் சொத்துக்களினதும் நிதிசார் பொறுப்புகளினதும் நியாயப் பெறுமதி சந்தையில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாத போது அவற்றின் நியாயப் பெறுமதி கழிவுக் காசுப்பாய்ச்சல் முறை உட்பட மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன. இம் முறைமைகளுக்கான உள்ளீடுகள் இயலுமான போது அவதானிப்புச் சந்தைகளில் இருந்து பெறப்படுகின்ற போதிலும் இயலாத போது நியாயப் பெறுமதியை ஏற்படுத்துவதற்கு நியாயப்பாடு தேவைப்படுகின்றது. திரவ இடர், கடன் இடர் மற்றும் ஏற்ற இறக்கம் போன்ற உள்ளீடுகளின் பரீசீலனைகளும் இந் நியாயங்களில் உள்ளடங்கும். இக் காரணிகள் குறித்த ஊகங்களின் மாற்றங்கள் அறிக்கையிடப்பட்ட நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியைப் பாதிக்கின்றன.

## 3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைளின் சுருக்கம்

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ள சகல காலப்பகுதிக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 3.1 அந்நிய செலாவணி

### 3.1.1 அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல் மீதிகள்

அந்நிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் அவை முதற் தடவையாக அங்கீகரிக்கப்படும் திகதியில் நிலவும் செயற்படு நாணயப் புள்ளி விகிதத்தில் கம்பனியால் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக வகுக்கப்பட்டுள்ள நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் உருவக விடயங்களாவதுடன் இப் பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி அல்லது வழங்கல் பயன்பாட்டிற்காக ஏனையோருக்கு வாடகைக்கு அல்லது நிர்வாக நோக்கங்களுக்காகவும் எதிர்பார்க்கப்படும் அந்நிய செலாவணி, அறிக்கையிடல் திகதியிலான பரிவர்த்தனைக்கு நடைமுறை நாணய புள்ளி விகிதத்தில் மீள் பரிவர்த்தனை செய்யப்படுகின்றது. நாணய விடயங்களின் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது தீர்வுகளின் மீது ஏற்படும் இலாப நட்ட வேறுபாடுகள் அனைத்தும் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

காலக்கழிவு கிரயத்திலான மாற்றங்கள் தொடர்பிலான பரிமாற்ற வேறுபாடுகள் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

### 3.2 ஆதனம், பொறி மற்றும் கருவிகள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் உருவக விடயங்களாவதுடன் இப் பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி அல்லது வழங்கல் பயன்பாட்டிற்காக ஏனையோருக்கு வாடகைக்கு அல்லது நிர்வாக நோக்கங்களுக்காகவும் ஒரு வருட காலத்திற்கு மேலான காலத்திற்காகப் பயப்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட சேத இழப்புகள் ஏதேனும் இருப்பின் மதிப்பிடப்பட்டு காணி நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

### 3.2.1 ஏற்பிசைவின் அடிப்படை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சொத்துக்களுடன் தொடர்புபட்ட எதிர்காலப் பொருளாதார நலன்கள் கம்பனிக்குள் பாய்ச்சப்படும் இயலுமையும் சொத்தின் கிரயம் நம்பகரமான முறையில் அளவிடப்படக் கூடியவிடத்து ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.2.2 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் அச் சொத்துக்களை குறித்த இடத்திற்குக் கொண்டுவருவதற்காக நேரடியாக ஏற்கப்படும் ஏதேனும் கிரயங்கள் உள்ளடங்கலாக குறித்த பாவனைக்குத் தயாரான நிலைக்கு கொண்டுவரப்படும் வரையில் ஏற்பட்ட அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கியதாகக் கணிப்பிடப்படும்.

சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயத்தில் பொருட்களின் கிரயம் மற்றும் நேர் ஊழியம், அச் சொத்துக்களை குறித்த இடத்திற்குக் கொண்டுவருவதற்காக நேரடியாக ஏற்கப்படும் ஏதேனும் கிரயங்கள் மற்றும் பொருட்கள் கழற்றப்பட்டு, அகற்றப்பட்டு அவை இருக்க வேண்டிய இடங்களில் மீளப் பொருத்தப்படுவதற்கான கிரயங்களும் உள்ளடக்கப்படுகின்றன.

### 3.2.3 தொடர்ந்து வரும் கிரயங்கள்

செலவினங்களுடன் தொடர்புற்ற எதிர்காலப் பொருளாதார நலன்கள் கம்பனிக்குப் பாய்ச்சப்படுவதற்கான வாய்ப்புக் குறைகையில் மாத்திரமே தொடர்ந்துவரும் செலவினங்கள் மூலதனமாக்கப்படுகின்றன. தற்போதுள்ள பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புக்கள் ஏற்கப்பட்ட செலவினங்களாகக் கருதப்படுகின்றன.

### 3.2.4 மீள்மதிப்பீட்டு மாதிரி

கம்பனி சகல இறையில் காணி கட்டிடங்களிற்கும் மீள்மதிப்பீட்டு மாதிரியைப் பிரயோகிக்கின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2007.03.12 ஆம் திகதியான மீள்பெறுமதியிடப்பட்ட திகதியில் உள்ளவாறான நியாயப் பெறுமதியில் இருந்து ஏதேனும் தொடர்ந்துவரும் திரண்ட பெறுமானத்தேய்வுகளும் தொடர்ந்துவரும் சேத இழப்புகளும் கழிக்கப்பட்டு அவை பெறுமதியிடப்பட்டுள்ளன.

கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2012 மார்ச் 31 இற்கு முன்னரான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் மீள்பெறுமதியிடப்பட்ட தொகையில் கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

### 3.2.5 கிரய மாதிரியைத் தேர்வு செய்தல்

காணி கட்டிடங்கள் 2007.03.12 ஆம் திகதிய மீள்மதிப்பீட்டுத் திகதிய நிகர் நிலைக் கிரயத்திலும் இவை தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு மீள்மதிப்பிடப்பட்ட தொகையைத் தேர்வு செய்துள்ளன. இதன் படி, காணி கட்டிடங்கள் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நிகர் நிலைக் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வும் ஏதேனும் திரண்ட சேத இழப்புகளும் கழிக்கப்பட்டதை அடுத்து பதியப்பட்டுள்ளன.

கம்பனி காணி கட்டிடங்களை மீள்மதிப்பிடப்பட்ட தொகைகளில் கணிப்பிட்டு உரிமையாண்மைக் கூற்றில் நியாயப் பெறுமதி மாற்றங்கள் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன. கம்பனி அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரை காணி கட்டிடங்களின் நியாயப் பெறுமதியை நிர்ணயிக்கும் பொருட்டு 2007.03.12 ஆம் திகதி ஈடுபடுத்தியிருந்தது.

### 3.2.6 குறை ஏற்பிசைவு (derecognition)

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஓர் விடயத்தின் கொண்டு செல்லல் தொகை அகற்றலின் போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார நலன்கள் இல்லாத போது குறைஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஒரு விடயம் குறை ஏற்பிசைவு செய்யப்படுகையில் குறை ஏற்பிசைவின் மூலம் பெறப்படும் இலாபம் அல்லது நட்டம் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ஓர் விடயத்தின் பதிலீட்டுக் கிரயங்கள் கொண்டு செல்லல் தொகையில் ஏற்பிசைவு செய்யப்படுகையில் பதிலீடு செய்யப்பட்ட தொகையில் எஞ்சிய கொண்டுசெல்லல் தொகை குறைஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.2.7 பெறுமானத்தேய்வு

ஓர் சொத்தின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்கு ஆயத்தமானதிலிருந்து ஆரம்பமாகின்றது. அதாவது, முகாமைத்துவத்திற்குத் தேவையான வகையில் செயற்பாட்டிற்கு உரித்தாக தேவையான நிலையில் குறித்த இடத்தில் உள்ளபோதாகும். சொத்தொன்று விற்பனைக்காக உள்ள திகதி அல்லது சொத்து குறை ஏற்பிசைவு செய்யப்பட்ட திகதி இவற்றில் முந்நிய திகதியில் இருந்து ஓர் சொத்தின் பெறுமானத்தேய்வீடு நிறைவு பெறும். சொத்தொன்று விளைவற்றுள்ளபோதோ அல்லது முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்டாலன்றி அதன் செயற்படு பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டாலோ பெறுமானத்தேய்விலிருந்து நிறைவுற மாட்டாது.

காணி பெறுமானத்தேய்விடப்படுவதில்லை. ஏனைய சொத்துக்களின் மீதான பெறுமானத்தேய்வு பின்வரும் வீதங்களில் கம்பனியால் நுகரப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் சொத்துக்களின் எதிர்காலப் பொருளாதார நலன்களின் வடிவை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலத்திற்கு உரித்தான காலப்பகுதிகளுக்காக நேர் முறையில் கணிப்பிடப்படுகின்றன.

அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலமும் எஞ்சிய பெறுமதியும் ஒவ்வொரு அறிக்கையிடற் காலப்பகுதியின் போதும் மீளாயப்படுகின்றன. நடைமுறை மற்றும் ஒப்பீட்டுக் காலப்பகுதியின் போதான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலங்கள் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 20 ஆண்டுகள் |
| இயந்திர உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 05 ஆண்டுகள் |
| அலுவலக தளபாடம் | 10 ஆண்டுகள் |
| வேலைத்தள கருவிகள் | 05 ஆண்டுகள் |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| கணனி உதிரிப் பாகங்கள் | 05 ஆண்டுகள் |

சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகை மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கையில ஓர் சொத்தின் கொண்டு செல்லல் தொகை உடனடியாக அதன் அறவிடப்பட வேண்டிய தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது.

### 3.2.8 நிதிசாரா சொத்துக்களின் சேத இழப்பு

இருப்புகள் மற்றும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் தவிர்ந்த கம்பனியின் ஏனைய நிதிசாராச் சொத்துக்களின் கொண்டுசெல்லல் பெறுமதியும் சேதஇழப்பிற்கான ஏதேனும் சாத்தியம் உள்ளதா என்பதனை நிர்ணயிக்கும் பொருட்டு ஒவ்வொரு அறிக்கைத் திகதியின் போதும் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் சாத்தியம் இருப்பின், அறவிடப்பட வேண்டிய சொத்துக்களின் தொகை மதிப்பிடப்படுகின்றது. ஓர் சொத்தின் கொண்டு செல்லல் தொகை அல்லது அதன் காசு உருவாக்கல் அலகானது அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையை விட மிகைக்குமாயின் சேத இழப்பாக ஏற்பிசையப்படுகின்றது.

ஓர் சொத்தின் பயன்பாட்டுப் பெறுமதி மற்றும் நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயம் கழிக்கப்பட்டதைப் பார்க்கிலும் உள்ள மிகை அதன் அறவிடப்பட வேண்டிய தொகை அல்லது காசு உருவாக்கல் அலகாகும். பயன்பாட்டுப் பெறுமதியை மதிப்பிடுகையில் சொத்துக்களுக்கு குறிப்பிடப்பட்ட இடர்கள் அல்லது காசு உருவாக்கல் அலகிற்கும் பணத்தின் நேரப் பெறுமதியின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கும் முன் வரி கழிவு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டு அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் கழிவிடப்படுகின்றன. அவற்றின் சேத இழப்பு பரீட்சிப்பு நோக்கத்திற்காக தனியாக பரீட்சிக்கப்பட முடியாத சொத்துக்கள் ஏனைய சொத்துக்கள் அல்லது காசு உருவாக்கல் அலகுகளின் காசு உட்பாய்ச்சலின் பாரிய சுதந்திரத்தன்மையுடன் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதன் மூலம் காசு உட்பாய்ச்சலை உருவாக்கும் மிகச் சிறிய சொத்துத் தொகுதிகளாகத் தொகுக்கப்படுகின்றன.

ஓர் சொத்தின் அறவிடப்பட வேண்டிய தொகை (அல்லது காசு உருவாக்கல் அலகு) அதன் கொண்டு செல்லல் தொகையை விடக் குறைவாக மதிப்பிடப்படின் அச் சொத்தின் கொண்டு செல்லல் தொகை (அல்லது காசு உருவாக்கல் அலகு) அதன் அறவிடப்பட வேண்டிய தொகைக்குக் குறைக்கப்படுகின்றன. ஓர் சேத இழப்பானது விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நன்மதிப்பு தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் தொடர்பாக, முன்னைய காலப்பகுதியின் போது ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்புகள் அச் சொத்துக்கள் குறைவாகும் அல்லது தொடர்ந்து நிலவாதமைக்கான ஏதேனும் சாத்தியங்கள் இருப்பின் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மதிப்பிடப்படுகின்றன. அறவிடப்பட வேண்டிய தொகை நிர்ணயிக்கையில் பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்கள் இருப்பின் ஓர் சேத இழப்பு எதிர்நிலைக்கு மாற்றப்படுகின்றது. ஓர் சேத இழப்பு ஏற்பிசைவு செய்யப்படாவிடின், பெறுமானத்தேய்வு அல்லது காலக்கழிவின் தேறிய தொகையில் நிர்ணயிக்கப்படும் கொண்டு செல்லல் தொகையை விஞ்சாத சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகையின் அளவிற்கு மாத்திரமே ஓர் சேத இழப்பு எதிர்நிலைக்கு மாற்றப்படுகின்றது.

**3.3 அருவகச் சொத்துக்கள்**

தொடர்புபட்ட உபகரணத்தின் செயற்பாட்டுடன் ஒன்றிணைந்த கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் கணனி உபகரணத்தின் பாகமாக மூலதனமாக்கப்படுகின்றது.

**3.4 மூலதன குறை வேலை**

ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு பூர்த்திசெய்யப்படாத ஆண்டின் போது உறப்பட்ட மூலதனச் செலவினங்கள் மூலதனக் குறைவேலையாகக் காண்பிக்கப்படும் அதே வேளை ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ள மூலதனச் சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு மாற்றப்பட்டுள்ளன.

**3.5 நடைமுறைச் சொத்துக்கள்**

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையாக வகைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் காசும் வங்கி மீதிகளும் மற்றும் வழமையான செயற்பாட்டுச் சுற்றோட்டத்தின் போது காசாக தேறக்கூடியதாக எதிர்பார்க்கப்பட்ட அல்லது நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் இதில் எது குறுகியதாகும்.

**3.5.1 இருப்புகள் - நேர் மற்றும் கலவை உரங்கள்**

இருப்புகள் (நேர் மற்றும் கலவை உரங்கள்) கிரயத்திலிருந்து மானியத்தொகை கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றது. முதல் வந்து முதல் போகும் (குஜகுழு) முறையில் கிரயம் நிர்ணயிக்கப்படுகின்றது. கலவை உரக் கிரயம், மூலப் பொருட்கள், நேர் ஊழியம், ஏனைய நேர் கிரயங்கள் மற்றும் தொடர்புபட்ட உற்பத்தி மேந்தலைகளை உள்ளடக்கியதாகும். உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட இருப்புகள் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. தேறிய கைக்கெட்டிய பெறுமதியானது வழமையான வியாபாரச் சூழலிலான மானியப் பெறுமதியிலிருந்து பிரயோகிக்கப்பட்ட விற்பனைச் செலவினங்கள் கழிக்கப்பட்டதாகும்.
பொதி செய் பொருட்களும் நுகர்வு விடயங்களும் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3.6 நிதிக் கருவிகள்

### 3.6.1 மூலத்திலிருந்து அல்லாத நிதிச் சொத்துக்கள்

ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

கம்பனி, நிதிக் கருவிகளின் ஒப்பந்த ஏற்பாடுகளிற்கான ஓர் தரப்பினரானதும் மாத்திரமே நிதிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை கம்பனி நிர்ணயிக்கின்றது. நிதிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகையில் நியாயப் பெறுமதியுடன் நேரடியாக காரணமான கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் கூட்டப்பட்டு கணிப்பிடப்படுகின்றன. எவ்வாறெனினும், இலாப நட்டங்களினூடாக நியாயப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களைக் கருத்திற்கொள்கையில் நேரடியாகக் காரணமான கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் கருத்திற்கொள்ளப்படுவதில்லை.

வகைப்படுத்தல் மற்றும் தொடர்ந்து வரும் அளவீடும்

ஆரம்பத்தில் ஓர் நிலையான சொத்து பின்வரும் ஒரு வகையில் வகைப்படுத்தப்படுகின்றது.

அ. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

ஆ. கடன்களும் பெறவேண்டியவைகளும்

இ. இலாப நட்டங்களினூடாக நியாயப் பெறுமதியில்

ஈ. விற்பனைக்காக உள்ளவை (AFS)

#### 3.6.1.1 வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் வழிவராத நிதிச் சொத்துக்களாகும். இவை நிர்ணயிக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளாவதுடன் கடன்கள் மற்றும் பெறவேண்டியவை தவிர்ந்த ஏனையவை முதிர்வு நிர்ணயிக்கப்பட்டவையாகும். கம்பனி சாதகமான கருத்தையும் முதிர்வு வரை அவற்றை வைத்துக்கொண்டு விற்பனைக்காக உள்ளவையாக அல்லது இலாப நட்டத்தின் மூலம் நியாயப் பெறுமதியில் உள்ளவாறு நிர்ணயிக்கப்படாதவை முதிர்வு முதலீடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பதியப்படுகின்றன.

#### 3.6.1.2 கடன்களும் பெறவேண்டியவைகளும்

கடன்களும் பெறவேண்டியவைகளும் வழிவரா நிதிச் சொத்துக்களாவதுடன் இவை நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளைக் கொண்ட நடைமுறைச் சந்தை ஒன்றில் கோரப்படாதும் கம்பனியால் உடனடியாக அல்லது அண்மித்த காலப்பகுதியின் போது விற்பனை செய்யப்படுவதற்கு அல்லாதவையாகும். நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியை அடுத்துள்ள 12 மாதங்களிற்கு மேற்பட்ட முதிர்வுக் காலத்திற்கானவை தவிர்ந்த கடன்களும் பெறவேண்டியவைகளும் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கம்பனியின் கடன்களும் பெறவேண்டியவைகளும் அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலான பெறவேண்டிய மானியம், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், அரசாங்க பிணைகள், நிலையான வைப்புகள், முற்கொடுப்பனவுகள், முற்பணங்கள், வைப்புகள், ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் காசும் காசிற்குச் சமனானவைகளையும் உள்ளக்கியுள்ளன.

நிதியாண்டின் போது இலாப நட்டங்களினூடாக நியாயப் பெறுமதியிலும் விற்பனைக்காக உள்ளவையாகவும் சொத்துக்கள் எவையும் வகைப்படுத்தப்படவில்லை.

### 3.6.2 தொடர்ந்துவரும் அளவீடுகள்

கீழே வரையறுக்கப்பட்டவாறு நிதிச் சொத்துக்களின் தொடர்ந்துவரும் அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலைச் சார்ந்தவையாகும்.

### 3.6.2.1 வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் ஆக்கபூர்வமான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவு கிரயத்தில் பின்னர் அளவிடப்படுகின்றன. காலக்கழிவுக் கிரயம் கழிவு அல்லது கொள்வனவு மற்றும் கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் மீதான வட்டம் அல்லது கழிவை கருத்திற்கொண்டே கணிப்பிடப்படுகின்றன.

### 3.6.2.2 கடன்களும் பெறவேண்டியவைகளும்

ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் கடன்களும் பெறவேண்டியவைகளும் ஆக்கபூர்வமான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவிற்கான படிப்பணத்தைக் கழித்து காலக்கழிவு கிரயத்தில் அளவிடப்படுகின்றன. காலக்கழிவுக் கிரயம் ஆக்கபூர்வமான வட்டி வீதத்தின் ஒன்றிணைந்த பாகமான கிரயங்கள் அல்லது கட்டணங்கள் மற்றும் கொள்வனவின் மீதான ஏதேனும் கழிவு அல்லது வட்டத்தையும் கருத்திற்கொண்டே கணிப்பிடப்படுகின்றன. ஆக்கபூர்வமான வட்டி வீத காலக்கழிவு நிதி வருமானமாக இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.6.2.3 குறை ஏற்பிசைவு

கம்பனி நிதிச் சொத்துக்களில் இருந்தான காசுப்பாய்ச்சல்களிற்கான ஒப்பந்த உரிமைகள் முடிவுறுகையில் அல்லது கணிசமாக ஓர் கொடுக்கல் வாங்கலில் நிதிச் சொத்தை மாற்றுகையில் நிதிச் சொத்துக்களை குறைஏற்பிசைவு செய்கின்றது.

நிதிச் சொத்துக்களின் அனைத்து உரிமைகளின் இடர்களும் வெகுமதிகளும் மாற்றப்பட்டு அல்லது கம்பனி நிதிச் சொத்துக்களின் கட்டுப்பாட்டைக் கொண்டிராது உரிமைகளின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமான அளவில் கொண்டிராத போதுமாகும். மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களின் ஏதேனும் வட்டி கம்பனியால் உருவாக்கப்பட்டு அல்லது தக்கவைத்துள்ள குறை ஏற்பிசைவிற்காக தகைமைபெற்றவை வேறான சொத்து அல்லது பொறுப்பாக நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது. ஓர் நிதிச் சொத்தின் குறை ஏற்பிசைவில், சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதிக்கும் (அல்லது மாற்றப்பட்ட சொத்தின் பகுதிக்காக ஒதுக்கப்பட்ட கொண்டு செல்லல் தொகை), பெறப்பட்ட கருத்தையும் (பெறப்பட்ட ஏதேனும் புதிய சொத்து உள்ளடங்கலாக ஏதேனும் எதிர்வுகூறப்பட்ட புதிய பொறுப்பைக் கழித்து) இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. கம்பனி ஓர் நிதிப் பொறுப்பை அதன் ஒப்பந்தக் கடப்பாடு வெளிப்படுத்தப்பட்டதும் அல்லது இரத்துச் செய்யப்பட்டதும் அல்லது காலாவதியானதும் குறை ஏற்பிசைவு செய்கின்றது.

### 3.6.3 நிதிச் சொத்துக்களின் சேதம்

#### காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் சொத்துக்கள்

காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்களுக்காக கம்பனி தனியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதிச் சொத்துக்களுக்காக தனியாக உள்ள புறநிலைச் சான்றுகள் உள்ளனவா என்பது குறித்து அல்லது தனியாக முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்காக ஒன்றித்தும் அறிக்கையிடற் காலப்பகுதியின் இறுதியில் மதிப்பீடு செய்கின்றது. நிதிச் சொத்து தனியாக மதிப்பிடப்படுகையில் சேதத்திற்கான புறநிலை சான்று இல்லை என கம்பனி நிர்ணயித்திருப்பின் முக்கியமாக இருப்பினும் இல்லாவிடினும் சேதத்திற்காக ஒன்றித்து அவை மதிப்பிடப்பட்டு ஒத்த கடன் இடர் பண்புகளுடன் நிதிச் சொத்துக்களின் ஓர் தொகுப்பாக சொத்தை உள்ளடக்குகின்றது.

சொத்தின் ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து நேர்ந்த ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவாக (ஓர் இழப்புச் சம்பவம்) மற்றும் அவ் இழப்பு சம்பவம் (அல்லது சம்பவங்கள்) நம்பகமான முறையில் மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்துக்களின் எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மீதான ஓர் தாக்கத்தைக் கொண்ட சேதம் நேர்ந்தமைக்கான புறநிலைச் சான்றுகள் இருந்தால் மாத்திரமே ஓர் நிதிச் சொத்து சேதமாகக் குறிப்பிடப்படுகின்றது. இழப்பின் தொகை சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் (இது வரை உறப்படாத எதிர்கால எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் தவிர்ந்த) இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி நிதிச் சொத்துக்களின் மூல ஆக்கபூர்வ வட்டி வீதத்தில் கழிவிடப்படுகின்றது.

காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டுசெல்லப்படும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளுக்காகவும் வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகளுக்காகவும் இழப்புத் தொகை (இது வரை உறப்படாத எதிர்கால கடன் இழப்புகள் தவிர்ந்த) சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாகக் கணிப்பிடப்பட்டு நிதிச் சொத்துக்களின் மூல ஆக்கபூர்வ வட்டி வீதத்தில் கழிவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகை குறைக்கப்பட்டு இழப்புத் தொகை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து வரும் காலப்பகுதியில் சேதஇழப்பு குறையுமாயின் அக் குறைவானது சேதம் ஏற்பிசைவு செய்யப்பட்டதை அடுத்து நேர்ந்த ஓர் சம்பவத்துடன் புறநிலையாக தொடர்புபடுத்தப்படக் கூடியதாகக் காணப்பட்டால் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பின் மீளல் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

கம்பனி, பெறவேண்டியவைகளுக்காக சேதத்தின் சான்றை குறித்த சொத்திலும் தொகுதியான நிலையிலும் கருத்திற்கொள்கின்றது. சகல தனியான குறிப்பிடத்தக்க பெறவேண்டியவைகளும் குறித்த சேதத்திற்காக மதிப்பிடப்படுகின்றன. தனியாக முக்கியத்துவம் பெறாத கடன்களும் பெறவேண்டியவைகளும் ஒரே தன்மையைக் கொண்ட இடர் தன்மையினதான பெறவேண்டியவற்றுடன் தொகுக்கப்பட்டு தொகுதியாக மதிப்பிடப்படுகின்றன.

கூட்டாக சேதத்தைக் கணிப்பிடுகையில் கம்பனி – தவறப்பட்டதன் நிகழ்தகவில் வரலாற்றுப் போக்குகளைப் பயன்படுத்தி அறவீடுகளின் நிகழ்வு நேரம் மற்றும் ஏற்பட்ட இழப்பின் தொகை உள்ளபடியான இழப்புகள் வரலாற்றுப் போக்குகளால் பரிந்துரைக்கப்பட்டதைப் பார்க்கிலும அதிகமாக அல்லது குறைவாக இருக்கும் கடன் நிலைமைகள் மற்றும் நடைமுறைப் பொருளாதாரங்களைப் பொறுத்த வரையில் முகாமைத்துவ தீர்வுகளிற்காக சீராக்கப்படுகின்றன.

இழப்புகள் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளுக்கு எதிராக ஓர் படிப்பணக் கணக்கில் பிரதிபலிக்கப்படுகின்றன. தொடர்ந்து வரும் சந்தர்ப்பம் சேத இழப்புத் தொகையைக் குறைவதற்குக் காரணமாயின் (உதாரணம் : ஓர் கடன்பட்டோரால் மீள்கொடுப்பனவு) சேத இழப்பின் குறைவு இலாப நட்டத்தினூடாக மீட்கப்படுகின்றது.

### 3.7 நிதிப் பொறுப்புகள்

#### 3.7.1 வழிவரா நிதிப் பொறுப்புகள்

##### 3.7.1.1 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

நிதிக் கருவிகளின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளிற்கு ஓர் தரப்பாக கம்பனி உள்ளானதை அடுத்து மாத்திரமே எஸ்எல்எப்ஆர்எஸ்.`.எல்கேஏஎஸ் இன் நோக்கெல்லைக்குள் நிதிப் பொறுப்புகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. நிதிப் பொறுப்புகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியுடன் நிதிப் பொறுப்புகள் இலாப நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிப்பொறுப்புக்களாகவும் ஏனைய நிதிப் பொறுப்புகள் ஆகிய இரு வகைகளில் வகைப்படுத்தப்படக் கூடியதைக் கூட்டி ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கம்பனி அதன் நிதிப் பொறுப்புக்களை ஏனைய நிதிப் பொறுப்பு வகையாக வகைப்படுத்தி உள்ளது.

#### 3.7.2 எதிரீடு

கம்பனியால் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகளை எதிரீடு செய்யப்படக்கூடிய சட்ட உரிமை இருந்து ஒன்றில் அது தேறிய அடிப்படை ஒன்றினால் எதிரீடு செய்யப்படுவதற்கு அல்லது சொத்தை ஏற்பிசைவு செய்து பொறுப்பை ஒரே முறையில் தீர்ப்பதற்கு முனைந்திருந்தால் மாத்திரமே நிதிச் சொத்துக்களும் பொறுப்புகளும் எதிரீடு செய்யப்பட்டு தேறிய தொகை ஒன்றிணைந்த நிதி நிலைமைக் கூற்றில் எதிரீடு செய்ய முடியும். வருமானமும் செலவினங்களும் அல்லது கம்பனியின் வியாபார நடவடிக்கையில் அத்தகைய ஒரே வகையிலான கொடுக்கல்வாங்கல்களின் ஓர் தொகுதியில் இருந்தான இலாபங்களும் நட்டங்களும் எல்கேஏஎஸ்.`. எஸ்எல்எப்ஆர்எஸ் இன் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே தேறிய அடிப்படை ஒன்றில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 3.8 வியாபார பெறவேண்டியவைகள்

வழமையான வியாபாரத்தின் போது பொருட்களின் விற்பனைக்காக நுகர்வோரிடம் இருந்தான நிலுவைத் தொகைகள் வியாபார பெறவேண்டியவைகளாகின்றன. சேகரிப்புகள் வியாபாரத்தின் வழமையான செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் எதிர்பார்க்கப்படுவதுடன் அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. வியாபார பெறவேண்டியவைகள் ஆரம்பத்தில் பட்டியன் பெறுமதியான நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

வியாபார பெறவேண்டியவைகள் ஆரம்பத்தில் பட்டியன் பெறுமதியான நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டு பின்னர் மூலப் பட்டியல் பெறுமதியில் இருந்து சேதங்கள் கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன.

கம்பனி ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலும் வியாபார பெறவேண்டியவைகள் சேதப்படுத்தப்படுவதற்கான புறநிலை சான்று உள்ளதா என மதிப்பிடுகின்றது. வியாபாரப் பெறவேண்டியவைகளுக்கான சேதத்தின் புறநிலை சான்றுகள் கம்பனியின் கொடுப்பனவுகளின் சேகரிப்புக் குறித்த கடந்த அனுபவங்களையும் கம்பனி உள்ளடக்கக் கூடியதுடன் ஆகக் கூடுதலான கடன் காலப்பகுதி 90 நாட்களைக் கடந்த தாமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளின் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பு காணப்பட்டது. வியாபார பெறவேண்டியவைகள் சேதமடைந்தமைக்கான புறநிலை சான்று இருந்தால் மாத்திரமே சேதங்களும் சேத இழப்புகளும் உறப்படுகின்றன. சகல வியாபார பெறவேண்டியவைகளும் சேதத்திற்காக தனியாக மதிப்பிடப்படுகின்றன.

சேதத்திற்கான வியாபார பெறவேண்டியவைகளின் மாதிரிகள் மற்றும் அடிப்படை பின்வருமாறாகும் :

தனிப்பட்ட மதிப்பீட்டு மாதிரி : சேத இழப்பைக் கணிப்பிடுவதற்கு பின்வரும் வியாபாரப் பெறவேண்டியவைகளின் வழிகள் தனியாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

i. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

ii. மனநல சேவை நிலையங்கள்

iii. அங்கீகரிக்கப்பட்ட பிரமுகர்கள்

iv. அரசாங்க நிறுவகங்களும் திணைக்களங்களும்.

### 3.9 காசும் காசிற்குச் சமனானவைகளும்

காசுப் பாய்ச்சல் கூற்றில், காசும் காசிற்குச் சமனானவைகளிலும் கையிலுள்ள காசு, வங்கிகளில் உள்ள அழைப்பு வைப்புகள், மூன்று மாதங்கள் அல்லது குறைவான மூல முதிர்வுடனான ஏனைய குறுங்கால உயர் திரவத்தன்மை முதலீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.10 கூறப்பட்ட மூலதனம்

பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்ட சாதாரண பங்குகள், இலங்கை அரசாங்க பொதுத் திறைசேரி உரிமையாண்மையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.11 வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள்

கம்பனியின் ஏனைய நிதிப் பொறுப்புகள் கடன்கள், வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் மற்றும் வங்கி மேலதிகப் பற்று என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் கொடுக்கல் வாங்கல் விலையான நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு பின்னர் ஓர் குறுகிய காலப் பகுதியில் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதால் பணத்தின் நேரப் பெறுமதி முக்கியம் இன்மையால் மூலப் பட்டியல் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.
வழங்குனர்களிடம் இருந்து வழமையான வியாபாரச் சூழலில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது வேலைகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடுகள் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள் ஆகும். வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள் சாதாரண வியாபாரச் செயற்பாட்டு சுற்றோட்டத்தில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

## 3.12 இரவல்கள்

### 3.12.1. ஆரம்ப ஏற்பிசைவு

இரவல்கள் நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டு தேறிய கொடுக்கல்வாங்கல் கிரயங்களில் ஏற்கப்படுகின்றன. இரவல்கள் பின்னர் செயல்முறையிலான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன.

### 3.12.2 பின்தொடர் அளவீடு மற்றும் ஏற்பிசைவு

கம்பனி வழிவரும் நிதிப் பொறுப்பை ஏனைய நிதிப் பொறுப்பாகவும் வகைப்படுத்துகின்றது. அத்தகைய நிதிப் பொறுப்புகள் நியாயப்பெறுமதியுடன் ஏனைய நேரடியாக பெறத்தக்க கொடுக்கல்வாங்கல் கிரயங்களையும் கூட்டி ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், இந் நிதிப் பொறுப்புகள் வட்டியைக் கொண்ட கடன்களையும் இரவல்களையும் உள்ளடக்கி செயல்முறையிலான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. இலாபங்களும் நட்டங்களும் பொறுப்புகள் குறைஏற்பிசைவு செய்யப்படுகையில் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.12.3 இரவல் கிரயம்

இரவல் கிரயங்கள் விபரமான வருமானக் கூற்றில் அவை உறப்பட்ட காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.12.4 அரசாங்க மானியங்கள் மற்றும் கொடைகள்

மானியங்கள் பெறப்படும் எனவும் கம்பனி சகல இணைந்த நிபந்தனைகள் குறித்தும் நியாயமான உத்தரவாதம் உள்ளபோது அரசாங்கத்திலிருந்தான மானியங்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

இறக்குமதிக் கிரயங்கள் தொடர்பான உர மானியங்கள் அவை ஈடுசெய்யப்படும் நோக்கிலான கிரயங்களுக்கு நிகராக விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஏற்கனவே உறப்பட்ட இறக்குமதிக் கிரயங்களிற்கு ஈடுசெய்யப்படுவதற்கான உர மானியங்கள், மானியங்கள் பெறப்பட முடியும் என்பதற்கு நியாயமான உறுதிப்பாடு இருப்பின் பெறவேண்டிய மானியமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஆதன, இயந்திர உபகரணங்களுடன் தொடர்பான அரசாங்க மானியங்கள் பிற்போடப்பட்ட அரசாங்க மானியங்களாக நடைமுறையல்லாப் பொறுப்புகளில் உள்ளடக்கப்பட்டு தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட வாழ்வுக் காலத்திற்கு ஓர் நேர்கோட்டு அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

## 3.13 கூட்டு வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி

கம்பனி வருமான வரிகளுக்கு உட்பட்டதாகும். இறுதி வரி விளைவானது ஆரம்பத்தில் அவை பதியப்பட்ட தொகையைப் பார்க்கிலும் வேறுபடக்கூடிய வரிக்குட்ட வருமானத்தின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு முன்கருதப்பட்ட வரிகளுக்காக பொறுப்புகளை கம்பனி ஏற்பிசைவு செய்கின்றது.

வேறுபாடானது அதன் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வருமான சரியைத் தாக்கம் செலுத்தக்கூடியதாகும். அத்தகைய வேறுபாடு, உறுதிப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலான நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளில் தாக்கம் செலுத்தக்கூடியனவாகும்.

காலப்பகுதிக்கான வரிச் செலவினங்கள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியை உள்ளடக்கியுள்ளன. ஏனைய விபரமான வருமானத்தில் அல்லது உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்பட்ட விடயங்கள் அல்லது ஏற்பிசைவு செய்யப்பட்ட விடயங்களுடன் தொடர்புபட்ட வரை தவிர விபரமான வருமானக் கூற்றில் வரி ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் வரியும் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.13.1 நடைமுறை வருமான வரி

நடைமுறை வருமான வரிக் கட்டணமானது, கடந்த ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய வரிக்கான ஏதேனும் சீராக்கங்களும் கம்பனிக்குப் பொருத்தமான அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியில் அமுலாக்கப்பட்ட அல்லது தொடர்ந்து அமுலாக்கப்பட்ட வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களின் அடிப்படையில் கணிப்பிடப்படும் வரி வருமானம் அல்லது நட்டத்தின் மீது எதிர்பார்க்கப்பட்ட செலுத்த வேண்டிய வரி அல்லது பெறவேண்டிய வரியாகும். உரிமை மூலதனத்துடன் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்பட்ட விடயங்களுடன் தொடர்பான நடைமுறை வருமான வரி இலாப நட்டத்தில் அல்லது உரிமை மூலதனத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

பொருத்தமான போது முகாமைத்துவம் வரி அதிகாரிகளுக்குச் செலுத்த வேண்டியதாக எதிர்பார்க்கப்பட்ட தொகையின் அடிப்படையில் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. பொருத்தமான வேளையில் சந்தர்ப்பங்களிற்கு ஏற்றவாறு வரிப் பிரமாணங்கள் விலக்கப்பட்டு ஏற்பாடுகள் முறைப்படி மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.13.2 பிற்போடப்பட்ட வரி

நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கொண்டு செல்லல் தொகைக்கும் வரி நோக்கங்களுக்காக அல்லது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் கொண்டு செல்லப்படும் தொகைகள் தவிர்ந்தவைக்கும் இடையில் ஏற்படும் தற்காலிக வரி வேறுபாடுகள் பிற்போடப்பட்ட வரியாகும்.

(அ) நன்மதிப்பின் ஆரம்ப ஏற்பிசைவு் அல்லது

(ஆ) ஓர் கொடுக்கல் வாங்கலில் ஓர் சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப ஏற்பிசைவானது

i. ஓர் வியாபாரத்தின் ஒருங்கிணைப்பாக அல்லாத வகையிலும்

ii. கொடுக்கல்வாங்கல் வேளையில் கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிக்குட்படத்தக்க இலாபத்தைத் தாக்காத வகையிலுமானவையாகும்.

கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டின் போது அல்லது வரி இலாப அல்லது நட்டத்தைத் தாக்கும் வேளையில் ஓர் வியாபார ஒருங்கிணைப்பு தவிர்ந்த ஓர் கொடுக்கல் வாங்கலில் ஓர் சொத்து அல்லது பொறுப்பில் ஆரம்ப ஏற்பிசைவிலிருந்து ஏற்படுமாயின் பிற்போடப்பட்ட வரி கணக்கீடு செய்யப்பட மாட்டாது. அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவுத் திகதியில் சட்டவாக்கமாக்கப்பட்ட வரி வீதத்தைப் பயன்படுத்துவதன் மூலமும் தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் தேறுகையில் பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகையில் அல்லது பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு தீர்க்கப்படுகையில் பிற்போடப்பட்ட வரி நிர்ணயிக்கப்படுகின்றது.

தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்தப்படக் கூடிய அளவிற்கு எதிராக உள்ள எதிர்கால வரி இலாபத்திற்கு சாத்தியமாக உள்ள தொகை வரை மாத்திரமே பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் வருமான வரிகள் விதித்த அதே வரி அதிகாரியுடன் தொடர்புபடுகையில் நடைமுறை வரிச் சொத்துக்கள் நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக எதிரீடு செய்யப்படுவதற்காக ஓர் சட்ட அமுலாக்கம் இருக்குமாயின் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் எதிரீடு செய்யப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு போதிய வரி இலாபம் சகல அல்லது பகுதியளவிலான பிற்போடப்பட்ட வரிச் சொத்து பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிப்பதற்குச் சாத்தியம் இல்லாத வரைக்கும் குறைக்கப்படுகின்றது. ஏற்பிசைவு செய்யப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியின் போதும் மீள் மதிப்பிடப்பட்டு அறவிடப்பட உள்ள பிற்போடப்பட்ட வரிச் சொத்து அனுமதிக்கும் எதிர்கால வரி இலாபங்களுக்குச் சாத்தியமான வரையான அளவிற்கு ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஓர் பிற்போடப்பட்ட வரிச் சொத்து பயன்படுத்தப்படாத வரி இழப்புகள், வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படக் கூடிய அளவிற்கு எதிராக கிடைக்கப்பெற்ற எதிர்கால வரிப் பொறுப்புகளுக்குச் சாத்தியமான அளவு வரையான கழிக்கப்படக் கூடிய தற்காலிக வேறுபாடுகளில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதிக்கும் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்புபட்ட வரி நலன்கள் தேறும் வரையில் தற்போது சாத்தியப்படாத அளவிற்குக் குறைக்கப்படும்.

**3.14 ஊழியர் நலன்கள்**

கம்பனி விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் ஆகிய இரண்டையும் கொண்டுள்ளது.

**3.14.1 விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்**

பின் - ஊழிய நலன் திட்டத்தின் கீழ் வேறான ஓர் நிறுவகத்திற்கு நிலையான பங்களிப்புகளைச் செலுத்துமாயின் இது விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் ஆகும். எதிர்காலப் பங்களிப்பை மேற்கொள்வதற்கு கம்பனியானது சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகளைக் கொண்டமையவில்லை. விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் ஊழியர்களால் சேவைகள் வழங்கப்பட்ட காலப்பகுதியிலான வருமானக் கூற்றில் ஓர் ஊழிய நலன் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**3.14.2 ஊழியர் சேமலாப நிதியம்**

இலங்கை மத்திய வங்கியால் முகாமைத்துவம் செய்யப்படும் சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தின் 15% ஐயும் 10% ஐயும் கம்பனியும் ஊழியர்களும் பங்களிப்புச் செய்கின்றன.

**3.14.3 ஊழியர் நம்பக்கை நிதியம்**

இலங்கை மத்திய வங்கியால் முகாமைத்துவம் செய்யப்படும் ஊழியர் நம்பக்கை நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தின் 3% ஐ கம்பனி தொகுதி பங்களிப்புச் செய்கின்றது.
விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புகள் ஏற்கப்பட்டவாறு வருமானக் கூற்றில் ஓர் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**3.14.4 விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டம்**

ஓர் விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டமானது விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் தவிர்ந்த பின் - ஊழிய நலன் திட்டமாகும். கம்பனி 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் கொடுப்பனவின் கீழான நலன்களை மேற்கொள்வதற்கு பொறுப்புடையதாகும். விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட பொறுப்பு அறிக்கையிடற் திகதியில் உள்ளவாறான விதந்துரைக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாகும். திட்டமிப்பட்ட அலகுக் கடன் (PUC) முறை LKAS 19 – “ஊழிய நலன்” ஆல் பரிந்துரைக்கப்பட்ட முறையைப் பயன்படுத்தியே அறிக்கையிடற் திகதியில் உள்ளவாறான தகைமை உடைய பதிவாளர் மூலம் விதந்துரைக்கப்பட்ட நலன் கடப்பாடு கணிக்கப்படுகின்றது. இத்தகைய உள்ளபடியான பெறுமதிகள் ஆண்டிற்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகின்றன.
உள்ளபடியான எடுகோள்களின் மாற்றங்கள் மற்றும் ஏற்கப்பட்ட தகைமை பெற்ற சீராக்கங்களிலிருந்து உருவாகும் உள்ளபடியான இலாபங்களும் நட்டங்களும் அவை உருவான காலத்தின் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.
ஊழியர்களின் நலன்கள் தொடர்பான கம்பனி கடப்பாடுகளைக் கணிக்கையில் ஏற்படும் உண்மையான மதிப்பீட்டிலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டங்கள் ஏனைய விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் தொடர்புபட்ட பதவியணி கிரயமும் ஏனைய கிரயமும் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஊழியர்களின் ஓய்வூதிய நலன்கள் மீது எழும் கம்பனியின் பொறுப்பு வெளியில் இருந்து நிதியிடப்படுவதில்லை.

**3.14.5 குறுங்கால ஊழிய நலன்**

ஊழியர்களால் வழங்கப்படும் தொடர்புபட்ட சேவைகளுக்கான செலுத்தப்பட வேண்டிய ஓர் கழிவு செய்யப்படாத தொகை மீது குறுங்கால ஊழியர் நலக் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

### 3.15 ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புகளும்

முன்னைய சம்பவத்தின் விளைவாக தற்போதைய சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டை கம்பனி கொண்டு தொகைகள் நம்பகரமான முறையில் மதிப்பிடப்பட்டு கடப்பாடுகள் தீர்க்கப்படுவதற்கு கம்பனியிலிருந்து பொருளாதார மூலங்களின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியம் இருக்கையில் செயற்பாட்டுச் செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

தற்போதைய கடப்பாடுகளுடன் தொடர்புடைய உறுதியின்மை மற்றும் இடர்கள் உள்ளடங்கலாக அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான மிகவும் நம்பகரமான சான்றின் அடிப்படையில் தற்போதைய கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு மதிப்பீட்டுத் தேவைப்பாட்டில் ஏற்பாடுகள் அளவிடப்படுகின்றன. எதிர்கால நிகழ்வுகள் நிலையில்லாத போது அல்லது தற்போதைய கடப்பாடுகளில் பொருளாதார நலன் மாற்றப்படும் நிகழ்வு நிலையில்லாத போது அல்லது உறுதியாகக்கணிப்பிடப்பட முடியாத போது மாத்திரமே நிகழத்தக்க பொறுப்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. கம்பனியின் மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பிடத்தக்க குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.16 மூலதனக் கடப்பாடுகளும் நிகழத்தக்கவையும்

நிலையில்லாத எதிர்காலச் சம்பவங்களால் நிலைப்பாடு மாத்திரம் உறுதிப்படுத்தப்பட்ட அல்லது தற்போதைய கடப்பாடுகள் பொருளாதார நலன்களின் மாற்றம் சாத்தியமற்ற அல்லது நம்பகரமான முறையில் அளவிடப்பட முடியாதவை நிகழத்தக்க பொறுப்புகளாகும். கம்பனியின் மூலதனக் கடப்பாடும் நிகழத்தக்க பொறுப்புகளும் நிதிக்கூற்றுக்களின் தொடர்புபட்ட குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.17 ஐந்தொகைத் திகதியின் பின்னரான சம்பவங்கள்

ஐந்தொகைத் திகதியின் பின்னரான சம்பவங்களின் பொருண்மை நிலை கருத்திற்கொள்ளப்பட்டு முறையான சீராக்கங்களும் ஏற்பாடுகளும் தேவையான போது நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

சகல நிகழத்தக்க பொறுப்புகளும் மூலவளங்களின் வெளிப்பாய்ச்சல்களும் பின்தங்கி இருந்தாலன்றி நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக வெளிப்படுத்தப்படுகின்றன.

### 4. காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று “நேர் முறை” யைப் பயன்படுத்தி இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 7) - காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. காசும் காசிற்குச் சமனானவைகளும் பெறுமதியில் முக்கியமாகக் கருதப்படாத இடரிற்கு உட்பட்ட மற்றும் காசுத் தொகைகளாக உடனடியாக மாற்றப்படக் கூடிய உயர் திரவ முதலீகள், குறுங்காலத் தவணைகளை உள்ளடக்கியுள்ளன. கையிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள வைப்புகள், அழைப்பு மற்றும் குறும் அறிவித்தலிலுள்ள பணம் என்பவற்றையும் காசும் காசிற்குச் சமனானவை உள்ளடக்கும்.

### 5. வருமான ஏற்பிசைவு

வருமானம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் தேறிய மீதியில் குறிப்பிடப்பட்ட, பொருட்களின் விற்பனைக்காகப் பெறவேண்டிய தொகைகளைப் பிரதிநிதித்துவம் செய்பவதுடன், பெறவேண்டியவைகள் அல்லது பெறப்பட்ட மானியப் பெறுமதியில் கணிப்பிடப்படுகின்றது. கம்பனியின் வருமானத் தொகை நம்பகரமான முறையில் கணிப்பிடப்படக் கூடுமான போதிலும் கம்பனிக்கு எதிர்காலப் பொருளாதார நலன்கள் உட்பாய்ச்சப்படக்கூடிய சாத்தியம் உள்ளபோதும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

பின்வரும் குறித்த அளவுகோல்கள் வருமான ஏற்பிசைவு நோக்கங்களுக்காக கம்பனியால் பயன்படுத்தப்படுகின்றன.

### 5.1 உர விற்பனை

கம்பனி இறக்குமதி செய்து, அரசாங்கத்தால் குறிப்பாகக் கூறப்பட்டுள்ள அரச முகவரகங்களுக்கு உரங்களை நேரடியாகவும், கலப்பு உரங்களை மொத்த, சில்லறைச் சந்தைகளிலும் விற்பனை செய்கின்றது. நுகர்வோருக்கு இடர்களும் நலன்களும் மாற்றப்படும் தருணத்தில் பொருட்களின் விற்பனை ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. இது களஞ்சியத்திலிருந்து கொள்வனவாளரின் வாகனத்திற்கு ஏற்றப்படும் தருணமாகும்.

### 5.1.1 வட்டி வருமானம்

ஆக்கபூர்வமான வட்டி முறையைப் பயன்படுத்தி வருமானக் கூற்றில் பெருகுகையில் வட்டி வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 5.1.2 வாடகை வருமானம்

குத்தகைக் காலப்பகுதியின் போது அட்டுறு அடிப்படையில் வாடகை வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 5.2 ஆதன, பொறி மற்றும் உபகரணங்களிள் கைதவிர்ப்பு மீதான இலாபம் மற்றும் இழப்புகள்

கைதவிர்க்கப்பட்டவற்றின் இலாபங்களும் நட்டங்களும் கொண்டு செல்லல் தொகை, மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்துடன் விற்பனைப் பெறுவனவு ஒப்பிடப்பட்டே நிர்ணயிக்கப்பட்டு விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 5.3 ஏனைய வருமானம்

அட்டுறு அடிப்படையில் ஏனைய வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

## 6. செலவினம்

வினைத்திறனான நிலையில் பேணப்படும் ஆதன, பொறி உபகரணங்கள் மற்றும் வியாபாரத்தின் போது ஏற்கப்படும் சகல செலவினங்களும் ஆண்டிற்கான இலாபக் கணிப்பீட்டிற்காக வருமானத்திற்கு எதிராகச் சாட்டப்பட்டுள்ளன. வருமானக்கூற்றின் தயாரிப்பு நோக்கங்களுக்காக செலவினச் செயற்பாட்டு முறை பயன்படுத்தப்படுவதனால் கம்பனியின் செயற்பாட்டுக் கூறுகள் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுள்ளன என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும்.

வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்காக நிலையான தன்மையிலான சொத்துக்களின் கொள்வனவு, விஸ்தரிப்பு அல்லது முன்னேற்றுவதற்காக அல்லது வியாபாரத்தின் உழைப்பின் இயலளவை அதிகரிக்கும் நோக்கத்திற்காக ஏற்கப்பட்ட செலவினம் மூலதனச் செலவினமாகக் கருதப்படுகின்றது.

திருத்த வேலைகள் மற்றும் புதுப்பித்தல்களுக்காக அச் செலவினம் ஏற்பட்ட ஆண்டிலேயே வருமானக் கூற்றில் சாட்டப்படுகின்றன. கம்பனியால் உழைக்கப்பட்ட இலாபம் வரிச் செலவினத்திற்கு முன்னரும் சகல அறிந்த பொறுப்புகள், சேத இழப்புகள் மற்றும் ஆதன, பொறி, உபகரணங்களின் பெறுமானத்தேய்வுகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்தும் உள்ளவையாகும்.

## 7. பங்கிலாபங்கள் மீதான பிடித்து வைத்தல் வரி (WHT)

துணைக் கம்பனிகளின் வரிக்குட்பட்ட இலாபத்திலிருந்து பகிரப்பட்ட பங்கிலாபங்கள் வளத்தின் 10% இல் கழிக்கப்படுகின்றன.

## 8. தலா ஒரு பங்கிற்கான உழைப்பு அடிப்படை (EPS)

நிதிக்கூற்றுக்கள் அதன் தலா ஒரு பங்கிற்கான உழைப்பு அடிப்படையாக அதன் சாதாரண பங்காளர்களைக் குறிப்பிடுகின்றது. தலா ஒரு பங்கிற்கான உழைப்பு அடிப்படையானது கம்பனியின் சாதாரண பங்காளர்களின் உழிக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை அக் காலப்பகுதியின் போது நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் நிறையிடற் சராசரியால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

**9. தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள்**

விலை சாட்டப்பட்டதை பொருட்படுத்தாது ஒரு தரப்பினருக்கு மறு தரப்பினரின் நிதி மற்றும் செயற்பாட்டுக் கொள்கைகள்.்.  தீர்மானங்கள் மீது பாரியளவில் செல்வாக்கைச் செலுத்துவதற்கு அல்லது கட்டுப்படுத்தும் திறன் வாய்ந்த தரப்பினரின் கொடுக்கல்வாங்கல் தொடர்பான வெளிப்படுத்தலாகும்.

**9. இதுவரையில் அமுற்படுத்தப்படாத புதிய கணக்கீட்டு நியமங்கள்**

நியமங்கள் வழங்கப்பட்டு, கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் வியோகிப்புத் திகதி வரை அமுற்படுத்தப்பட்டிராததவை கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. இந் நியமங்களின் பட்டியற்படுத்தலும் வழங்கப்பட்ட விளக்கங்களும் எதிர்காலத் திகதியில் பிரயோகிக்கப்படுகையிலான செயற்பாடு அல்லது நிதி நிலைமை, வெளிப்படுத்தல்களின் போதான ஓர் தாக்கத்தை நியாயமாக எதிர் நோக்கும் கம்பனியினதாகும். அந் நியமங்கள் அமுலுக்கு வந்ததை அடுத்து கம்பனி அவற்றைக் கடைப்பிடிப்பதற்குள்ளது.

**9.1 SLFRS 13 – நியாயப் பெறுமதி அளவீடு**

